பக்கங்கள் 56

யாழ். - 30/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 355 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 30, ஞாயிறு 16.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

16 NOV 2014

உறவுகளை அரவணைக்கும் கூட்டமைப்பு



பக்கம் 08

# பொது வேட்பாளர் முடிவு நாளை

## உத்தியோகபூர்வ அறிவிப்பு 21 ஆம் திகதி

கொழும்பு, நவம்பர் 16
ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளராகப் போட்டியிடுபவர் குறித்து நாளை திங்கட்கிழமை முடிவு செய்யப்படவுள்ளது. இருப்பினும் இது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு, எதிர்வரும் 21 ஆம் திகதியளவிலேயே வெளியிடப்படும் என்று எதிர்க்கட்சிகளை மேற்கோள் காட்டிக் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி மாதம் இடம்பெறும் என்று உறுதியாகியுள்ள நிலையில், எதிர்க்கட்சிகள் தமது பொது வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பது குறித்துக் தீவிரமாக ஆலோசித்து வருகின்றன. அத்துடன் ஆளுங் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தற்போது பங்காளிக் கட்சிகளாகவுள்ள சிலவும், தேர்தலுக்கு முன்னதாகவே எதிர்க்கட்சிக் கூட்டணியுடன் இணையும் என்று



❖25 ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபை உறுப்பினருக்கு கொலை அச்சுறுத்தல்

வவுனியா, நவ 16
வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராஜாவுக்கு வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் தற்போதைய அதிபருமாகிய க.தனபாலசிங்கம் என்பவரால் தொலைபேசி மூலம்கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வவுனியா பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வவுனியா பூந்தோட்டம்

❖25 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் குடும்பப் பதிவில் இராணுவம்

கிளிநொச்சி, நவ.16
கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினர் குடும்பப் பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என்று கூறப்படுகிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று குடும்பப் பதிவுகளை அடிக்கடி திரட்டி வந்தனர். இதனால் மக்கள் அச்சமடைந்து பலருக்கும் முறையிட்டிருந்தனர்.

❖25 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் அடித்தது யோகம்

யாழ்ப்பாணம், நவ. 16
உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவும் இந்த மாதத்திலிருந்து அதிகரிக்கப்படவுள்ளதாக மாகாண உள்ளூராட்சிகள் அமைச்சர் அதாவுல்லா நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.
மாகாண சபைகள் உள்ளூராட்சிகள் அமைச்சு மீதான குழுநிலை விவாதம் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இந்த மாதம் முதல் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபாவிலிருந்து இருந்து 15 ஆயிரம் ரூபாவாகவும், உப தவிசாளருக்கான கொடுப்பனவு 6 ஆயிரம் ரூபாவில் இருந்து 20 ஆயிரம் ரூபாவாகவும், தவிசாளருக்கான கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவில் இருந்து 25

❖25 ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் போராளி ரி.ஐ.டியால் கைது

### மன்னாரில் தொடர்கிறது பதற்றம்

கொழும்பு, நவ.16
மன்னாரில் முன்னாள் போராளியான குடும்பஸ்தர் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.
20 வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பில் இருந்த இவருக்கு புனர்வாழ்வு வழங்கவேண்டும்

❖25 ஆம் பக்கம் பார்க்க

## ஆயுதப் போராட்டம் மீண்டும் வேண்டும்

### எச்சரிக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, நவ. 16
ஆயுதம் எடுத்து போராட வேண்டிய அவசியம் தற்போது மீண்டும் எழுந் துள்ளது. அது தவிர்க்க முடியாததாகியுள்ளது என்று, ஜே.வி.பியின் தலைவர் அனு ரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

❖25 ஆம் பக்கம் பார்க்க

## உயர் நீதிமன்றின் விளக்கம் சபைக்குக் கிடைக்கவில்லை

### நேற்றுக் கைவிரித்தார் சபாநாயகர்

யாழ்ப்பாணம், நவ. 16
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் எந்தச் சட்டச் சிக்கலுமில்லை என்று உயர் நீதிமன்றம் வழங்கிய விள்க்கம் இன்னமும் நாடாளுமன்றத்

❖25 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளுக்கு நோர்வே நிதியுதவி; விசாரிக்க கோருகிறார் மஹிந்த

கொழும்பு, நவ. 16
நோர்வேயின் முன்னைய அரசு விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கியமை குறித்து விசாரணைகள் இடம்பெறவேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.
குருநாகலில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில்

❖25 ஆம் பக்கம் பார்க்க

## நெல்சிப் மோசடி அறிக்கை 3 வாரங்களுள் வேண்டும்

### வடக்கு ஆளுநரும் உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 16
நெல்சிப் திட்டத்தில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் மோசடி தொடர்பில், வடக்கு முதலமைச்சரின் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழு 3 வாரங்களுக்குள் விசா

❖25 ஆம் பக்கம் பார்க்க

## நெல்சிப் மோசடி குறித்து சி.ஐ.டி. விசாரணை

### ஜனாதிபதியின் பணிப்புக்கமைய

யாழ்ப்பாணம், நவ. 16
நெல்சிப் திட்டத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புக்கு அமைய சி.ஐ.டியினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது. முதல் கட்டமாகச் சுன்னாகம் பிரதேச சபையில் விசாரணைகள் இடம்பெற்றுள்ளது.
வடக்கில் முன்னெடுக்கப்பட்ட நெல்சிப் திட்டத்தில் பெரும் நிதி மோசடி இடம்பெற்றதாக பல்வேறு தரப்பினராலும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அத்துடன் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் "சந்திரன். ஜனாதிபதி மஹிந்த

❖25 ஆம் பக்கம் பார்க்க

## சாட்சியம் பெறுவதை முடிவுறுத்தியது ஐ.நா.

### இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில்

கொழும்பு, நவ. 16
இலங்கையின் இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் நடத்தும் விசாரணைக்கான சாட்சியங்கள் பெற்றுக் கொள்ளப்படுவது

❖25 ஆம் பக்கம் பார்க்க




"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்"
- லியூசி லார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)

# இடப்பெயர்வு வேளை வங்கிகளால் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்ட நகைகளை மீளளியுங்கள்

## வடமாகாண சபைத் தீர்மானம் ஜனாதிபதிக்கு

யாழ்ப்பாணம், நவ. 16
யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது 1995 ஆம் ஆண்டு வங்கிகளில் இருந்து கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்ட நகைகள், பணம், வங்கிக் கணக்குகளை உரியவர்களிடம் ஒப்படைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், மத்திய வங்கியின் ஆளுநருக்கும் பேரவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் அனுப்பி'வைத்துள்ளார்.

அதில், கிளிநொச்சிக்கு வருகை தந்த ஜனாதிபதி, வன்னியிலிருந்து கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட அடகு நகைகளின் ஒரு பகுதியை அதன் உரிமையாளர்களுக்கு வழங்கியிருந்தார். இதேபோன்று 1995, 1996 காலப் பகுதிகளில் யாழ்ப்பாண இடப்பெயர்வின்போது அரச மற்றும் தனியார் வங்கிகளில் பொதுமக்களால் அடகு வைக்கப்பட்ட நகைகள், காப்புப் பெட்டகங்கள், வைப்பிடப்பட்ட பணம், உறங்கு நிலைக் கணக்குகள் என்பன கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன. எனவே அவற்றை அவற்றின் உரிமையாளர்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்கான பகிரங்க அறிவித்தலை விடுக்கவேண்டும். இயலாத பட்சத்தில் அத்தகைய நகைகள் மற்றும் பணத்தின் மொத்தப் பெறுமதிக்கேற்ப தொகையை யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்காக வடக்கு மாகாண சபையிடம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ்ப்பாண மக்களின் சொத்துக்களை வங்கிகள் தமதாக்கிக்கொள்வது மிகவும் நியாயமற்றது. எனவே இவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-5)

# ஈ.பி.டி.பியுடன் சேர்ந்து யாழ்.பல்கலையை தலை குனிய வைக்கின்றார் துணைவேந்தர்

## சரவணபவன் எம்.பி கடுமையாகச் சாடல்

யாழ்ப்பாணம், நவ. 16
பதவி ஆசை தீராததால் இரண்டாவது தடவையாகவும் துணைவேந்தர் பதவியை ஏற்று, இணக்க அரசியல் பேசும் ஈ.பி.டி.பியினருடன் இணைந்து பல்கலைக்கழகத்தை தலை குனிய வைக்கும் நடவடிக்கைகளே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அறிவு சார் சமூகத்தைச் சேர்ந்தவர்களை பல்கலைக்கழக பேரவைக்கு நியமிக்காமல், தமது தாளத்துக்கு ஏற்ப ஆடக் கூடியவர்களையே பேரவைக்கு நியமித்துள்ளனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

கச்சாய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் நேற்றுப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இன்று மாணவர்கள் மத்தியில் வாசிப்பு மற்றும் தேடுதல் பழக்கங்கள் இல்லாமல் போயுள்ளது. இவர்கள் மத்தியில் தேடுதல் பழக்கத்தினை உருவாக்க வேண்டும். பெற்றோர்கள் வீட்டில் தொலைக்காட்சியில் நாடகங்கள், திரைப்படங்கள் பார்ப்பதைத் தவிர்த்து பிள்ளைகளுடன் இருக்கும் போது டிஸ்கவரி மற்றும் பொது அறிவுக் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளை பார்க்க வேண்டும். இதன் மூலம் தேடுதல் கல்வி வளரும்.

அறநெறிக் கல்வி மிக முக்கியமாக தேவைப்படுகின்றது.



யாழ்ப்பாணத்தில் உள்ள உயர்தர மாணவர்கள் நெறி தவறி போகின்றார்கள். இன்று அறநெறிப் பாடசாலைகள் செயற்படுவதில்லை. அதற்கான முக்கியத்துவமும் வழங்கப்படவில்லை. அன்றைய காலத்தில் நல்லதொரு சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடிந்தது. இதனூடாக அறநெறி கல்வியின் முக்கியத்துவத்தை உணர வேண்டும்.

தற்போது அறநெறிக் கல்விக்கு இணக்க அரசியல் பேசும் ஈ.பி.டி.பியினரையே முதலில் அனுப்ப வேண்டும். அறம் என்றால் என்ன என்பது அவர்களுக்குத் தான் இப்போது அவசியமாக இருக்கின்றது. அவர்கள் இங்கிருக்கும் அரச உத்தியோகத்தர்களை, தமது கடமைகளைச் செய்யவிடாது இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தின் கல்விக் கூடமான யாழ்.பல்கலைக்கழகம் இன்று சீரழிந்து போய்க் கொண்டிருக்கின்றது. பல்கலைக்கழகத்தின் பேரவையில் நூறு வீதம் ஈ.பி.டி.பியைச் சேர்ந்தவர்களே இடம் பிடித்துள்ளனர். அதற்கு தற்போதைய துணைவேந்தரும் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குகின்றார்.

படித்த பெண்மணி, பேரவையில் இடம்பிடித்துள்ள ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுடன் சேர்ந்து, படித்த பேராசிரியர்களையும், துறை சார்ந்தவர்களையும் பேரவைக்குள் நுழைய விடாமல் இருக்கின்றார். எவ்வளவு தூரம் இதனை பொறுத்துக் கொள்ள முடியும். படித்தவர்களும் மற்றவர்களும் தட்டிக் கேட்கவேண்டும்.

இன்று படித்தவர்கள் யாழ். பல்கலைக்கழகம் செல்லும் போது தலைகுனிந்து கொண்டு செல்ல வேண்டியுள்ளதாகப் பேராசிரியர் ஒருவர் சொன்னார். நல்ல பேரவை அமைய வேண்டும் என்றால் அது யார் கையிலும் இல்லை. அந்தப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கையில் தான் உள்ளது. ஆனால் இங்கு துணைவேந்தர் இணக்க அரசியல் பேசிக்கொள்ளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுரைக்கு அமையச் செயற்பட வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகியுள்ளார்.

பல்கலைக்கழகம் என்பது தனித்துவமாக இயங்க வேண்டியது. பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் யாருக்கும் பயப்படக் கூடாது. ஆனால் பயப்படக் கூடிய சூழ்நிலையில் வைத்திருக்கின்றார். இங்கு மாணவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்றால் சூழ்ச்சிகளைச் செய்து விட்டு, மாணவர்கள் தான் செய்தார்கள் என்று சொல்லி ஒரு சில மாணவர்களைக் கைது செய்கின்றனர். இதனால் மற்றைய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடம், தேவையில்லாத ஒன்றுக்கும் போக வேண்டாமென்று சொல்வார்கள். அவர்களும் அப்படியே இங்கு வந்து ஒன்றும் செய்ய முடியாது இருப்பார்கள். அதனால் அவர்களால் தனித்துச் செயற்படவோ முடிவெடுக்கக் கூடிய ஆற்றல் அற்று இருக்கின்றார்கள். பயத்துடன் தான் இங்கு படிக்கின்றனர்.

ஜனநாயக முறையில் முடிவெடுக்க முடியாமல் உள்ளனர். அப்படி ஏதாவது செய்ய முற்பட்டால் ஏதாவது ஒரு விதத்தில் சூழ்ச்சி செய்து ஈ.பி.டி.பியின் உதவியுடன் அவர்களின் வாயை அடைத்து விடுகின்றனர். இவரை இந்த படித்த சமூகம் தூற்றிக் கொண்டுள்ளதை அவர் புரிந்து கொள்ள வில்லை -என்றார். (த)

# 1,70,000 பழமரக்கன்றுகள் யாழ்ப்பாணத்தில் நடப்படும்

## தேசத்தின் மகுடம் செயல் திட்டத்தின் கீழ்



வலி.வடக்கு, நவ. 16
யாழ் மாவட்டத்தில் தேசத்தின் மகுடம் செயல் திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 70 ஆயிரம் பழமரக்கன்றுகளும், ஒரு லட்சம் தென்னங்கன்றுகளும் நாட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளா திருமதி மோகனேஸ்வரன் தெரிவித்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளையும் அவரது பதவியேற்பையும் நினைவு கூரும் வகையில் வருடாந்தம் நடத்தப்படும் தேசத்தின் நிழல் மரநடுகையின் யாழ். மாவட்டத்துக்கான நிகழ்வு நேற்று யாழ். மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கீரிமலைப் பகுதியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சுகிர்தன், மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்.

அத்துடன் வன வளத்தை அதிகரிக்கக் கூடிய 6ஆயிரத்து 250 மரக் கன்றுகள் வன வளத் திணைக்களம், தென்னைப் பயிர்ச் சபை , மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் உதவியுடன் 15 பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

நிலக்கீழ் நீர் மட்டத்தை அதிகரிக்கச் செய்தல், கமத்தொழிலுக்குத் தேவையான நீரைப் பாதுகாத்தல், மண்ணரிப்பைத் தடுத்தல், மரத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுதல், மற்றும் மண்ணின் செழிப்பை அதிகரித்தல் என்ற நோக்கத்தில் இந்தத் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் நாடு பூராகவும் இடம் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு-14-86)

# ராமேஸ்வரம் மீனவர்களின் வேலை நிறுத்தம் முடிவுக்கு

இராமேஸ்வரம், நவ.16
இந்திய மீனவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் கடந்த 15 நாள்களாக இராமேஸ்வரம் மீனவர்கள் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றுடன் கைவிடப்பட்டுள்ளது.

15 நாள்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டு வந்ததால் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதை அடுத்து மீனவர் சங்கங்கள் நேற்றுமுன்தினம் ஒன்றுகூடி மீள மீன் பிடிக்கச் செல்வதற்குத் தீர்மானித்தன. இதற்கமைவாக நேற்று முதல் மீனவர் கடலுக்குச் சென்றனர்.

வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டாலும் மீனவர்களின் விடுவிப்புக்கு மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். விடுவிப்பு காலதாமதமானால் தொடர்ந்து மீனவர்களின் போராட்டம் நீடிக்கும். அத்துடன் இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள படகுகளையும், கைது செய்யப்பட்ட மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (கு-14)

## கிணற்றினுள் விழுந்து சிறுவன் நேற்று சாவு

யாழ்ப்பாணம், நவ. 16
கிணற்றுக்குள் தவறி விழுந்த சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்தான்.

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் தனுசன் (வயது - 9) என்ற சிறுவனே உயிரிழந்தான். கிணற்றினுள் விழுந்த அவன் உடனடியாகப் புங்குடுதீவு வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டான். எனினும் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்படும்போது சிறுவன் உயிரிழந்துவிட்டான். அவனது சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (கு-4)

After O/L, A/L...
கணினி வல்லுநராவதற்கு
இன்றே எம்முடன் இணையுங்கள்

Diploma Courses
* Hardware + Basic Networking
* Advanced Networking

Advanced Certifications
Microsoft Certifications
* MCSA : Windows Server 2012
* MCSA : Windows 8
* MCSE : Desktop Infrastructure
* MCSE : Server Infrastructure (2012)
Cisco Certifications
* CCNA
* CCNP
Linux Administration
PHP, MySQL
*** Unlimited Practical Hours

Next Batch Starts On 1st Dec.

WinSYS NETWORKS
Network Security Training Provider in Jaffna

iCS International Academy
77,மணிக்கூட்டு கோபுர வீதி,
(பெருமாள்கோவில் அருகில்)
யாழ்ப்பாணம்.
Tel: 021 7306000 , 076 7013060

## தேசிய கணினி போட்டியில் சாதித்தது வேம்படி மகளிர்



யாழ்ப்பாணம்.நவ.16.
இலங்கையில் பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற கணினிப் போட்டியில் முதல்முறையாக யாழ்ப்பாணத்தின் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளது.
சர்வதேச சிறுவர் உரிமை மாநாட்டின் 25ஆவது வருடத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சிறுவர்களுக்கான நிதியம் 2014ஆம் ஆண்டை சர்வதேச சிறுவர் ஞாபகார்த்த வருடமாக பிரகடனப்படுத்தியுள்ளது.
இதன் அடிப்படையில் சிறுவர்களுக்கான நிதியம் இலங்கையிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் பங்குபற்றச் செய்து குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக கணினித் தொழில்நுட்பத்தை' அடிப்படையாகக் கொண்ட தீர்வுகளைச் சிறுவர்கள் மூலமாகவே பெற்றுக் கொள்ளும்வகையில்இலங்கையில் முதன்முறையாக 'ஹெக்கதோன்' போட்டியொன்றை நடத்தியுள்ளது.
நாடு முழுவதிலும் இருந்து நூற்றுக்கும் அதிகமான பாடசாலைகள் இந்தப் போட்டியில் பங்குபற்றியிருந்தன். இந்தப் போட்டியில் முதல் சுற்றில் 25 சிறந்த பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. இந்தத் தீர்வுத் திட்டங்களின் அடிப்படையில் அரையிறுதிச் சுற்றுக்கு 10 பாடசாலைக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.
யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவிகள் முன்வைத்த கணினித் தீர்வானது பாடசாலை மட்டத்தில் உள்ள மாணவர்கள் தமது திறமைகளை எவ்வாறு உலகுக்கு வெளிப்படுத்தலாம்' என்பதாகும். இந்த தீர்வுத் திட்டத்தை முன்வைத்தபோது, நடுவர்கள் குழு பல்வேறு கேள்விகளை எழுப்பியது. அதற்கு தைரியமாகவும், நேர்மையாகவும் வேம்படி மாணவிகள் பதிலளித்தனர்.
இந்தப் போட்டியில் பெந்தர மிரிஸ்வத்த பாடசாலை முதலாம் இடத்தையும், கொழும்பு டி.எஸ். சேனாநாயக்க கல்லூரி இரண்டாம் இடம்தையும், கிரிபத்கொட விகாரமஹா தேவி மகளிர் பாடசாலை மூன்றாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-14)

# அதிகம் விளையும் கச்சான் யாழிலும் பயிரிடத் திட்டம்

## ஆராய்கிறது திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம்

யாழ்ப்பாணம்.நவ.16
கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக விளைச்சல் தரக்கூடிய கச்சானை யாழ்.மாவட்டத்திலும் விதைப்பதற்குப் பொருத்தமுடையதா என்பது தொடர்பான ஆராய்ச்சியை திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்டு வருகிறது.
ஆராய்ச்சி வெற்றியளிக்கும் பட்சத்தில்எதிர்காலத்தில்வன்னி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கச்சான் வகைகள் யாழ்ப்பாணத்திலும் உற்பத்தி செய்யப்படும் என ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.
அதிக விளைச்சல் தரக் கூடியதும், குறைந்தது 3 மாத காலத்தில் உற்பத்தி செய்யக் கூடியதுமான கச்சான் வகைகள் கிளிநொச்சியில் உற்பத்தி செய்யப்படுகின்றபோதும் உற்பத்தி நிலத்தின் வேறுபட்ட தன்மை மற்றும் காலநிலை மாற்றங்களினால் யாழ்ப்பாணத்தில் சாதாரண கச்சான் இனமே உற்பத்தி செய்யப் பட்டு வருகின்றது.
வன்னி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பெரிய விதைகளைக் கொண்ட கச்சானையும், சுவையுடைய கச்சானையும் யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்ய முடிவதில்லை.
கிளிநொச்சி மாவட்டத்தில் முறிகண்டிப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் கச்சான் தரமானது, சுவையானது எனப் பலரால் கூறப்பட்டு வரும் நிலையில் அதே மாதிரியான கச்சானை யாழ்ப்பாணத்திலும் விளைவிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் நிலவுவதாகவும் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. இதற்கான ஆராய்ச்சிகள் தற்போது கிளிநொச்சி மாவட்டம் உட்பட யாழ்ப்பாணத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று ஆராய்ச்சி நிலைய அதிகாரி ஒருவர் கூறினார். (த-14)

## வலி.மேற்குப் பிரதேசக் கழிவுகளை அராலித் துறையில் கொட்ட முடிவு

சங்கானை, நவ.16
வலி.மேற்குப் பிரதேச சபையினால் அகற்றப்படும் திண்மக் கழிவுகள் அடுத்த வருட முற்பகுதியிலிருந்து அராலித் துறையில் கொட்டப்படுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகச் சபையின் செயலாளரும், தவிசாளரும் தெரிவித்துள்ளனர்.
இதற்காக ஒரு ஏக்கர் அரச காணி சுவீகரிக்கப்பட்டுச் சுற்று மதில் கட்டி முடிக்கப்பட்டுள்ளதென்றும், மேலும் சில நடவடிக்கைகள் செய்ய வேண்டியுள்ளதாகவும், அவற்றை நிவர்த்தி செய்த பின்னர் இந்தக் காணியில் திண்மக் கழிவுகளைக் கொண்டு சென்று கொட்டவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.
சங்கானை கரைச்சி இந்து மயான சேமக் காலை அபிவிருத்திச் சபையின் பொதுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது அதில் உரையாற்றும்போது அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.
இதுவரை காலமும் மேற்படி மயானத்தைப் பாவனை செய்வோர் பல சுகாதார அசௌகரியங்களுக்கு உட்பட்டு வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.
(த-29)



## தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒற்றுமையைக் கட்டி எழுப்புங்கள்

### வட மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் கோரிக்கை

தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒற்றுமையைக் கட்டி எழுப்புங்கள் என வட மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்தார். மன்னார் தாராபுரம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தாய் சேய் சுகாதார நிலையம் திறப்பு விழா கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது. குறித்த நிகழ்வுக்கு வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சி உறுப்பினர் ரிப்கான் பதியுதீனின் அழைப்பின் பேரில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.
இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி சிசில், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர்வைத்தியர்ரூபன்லெம்பேட் மற்றும்கிராம மக்கள், வைத்தியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-56)

## ஸ்ரீமுருகன் வி.க புதிய கட்டட திறப்புவிழா

தென்மராட்சி, நவ.16
சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்துக்கு வெளிநாடுகளில் உள்ள கழக உறுப்பினர்களின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் இன்று மாலை 5மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.
விளையாட்டுக்கழகத் தலைவர் க.தர்ஜசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைப்பார்.
(த-9)

## கைதடியில் மாணவர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி, நவ.16
கைதடி வடக்கு செல்வா சன சமூக நிலையத்தினர் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற நிலைய எல்லைக்குட்பட்ட மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வினை இன்று பி.ப. 2மணிக்கு கைதடி குருசாமி வித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர்.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன் கலந்து கொள்வார்.
(த-9)

# 'ஸ்ரீராமநாம கானாமிர்தம்' இசை வேள்வி நல்லூரில்

## தமிழகக் கலைஞர்கள் பங்கேற்பு





யாழ்ப்பாணம், நவ 16
அகில இலங்கை கம்பன் கழகத்தின் எற்பாட்டில் 'ஸ்ரீராம நாம கானாமிர்தம்' என்னும் பெயரிலான 'இசை வேள்வி' நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றது. இந்த இசை வேள்வி தொடர்ச்சியாக இன்றும், நாளை திங்கள் கிழமையும் தொடரும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.
தமிழக இசை மேதைகளான நெய்வேலி சந்தான கோபாலன், பம்பாய் ஜெயஸ்ரீ, கத்திரி கோபால்நாத், கன்னியாக் குமாரிஅகியோருடன் நம்நாட்டு கலைஞர்களும் இணைந்து இந்த இசை வேள்வியைச் சிறப்பாக நடத்த உள்ளனர்.
நேற்று முன்தினம் இடம்பெற்ற தியாகராஜர் உற்சவத்தின் போது நாதவாணி பம்பாய் ஜெயஸ்ரீ, கானகலாநிதி நெய்வேலி ஆர். சந்தான கோபாலன் ஆகியோரும் அவர்களுடன் இணைந்து ஈழத்தின் புகழ் பூத்த கலைஞர்களும் பஞ்சரத்தின கீர்த்தனைகள் இசைத்தனர். அத்தோடு ஈழத்தின் பிரபல தவில், நாதஸ்வரக் கலைஞர்களின் மங்கல இசையும் இடம்பெற்றது.
நேற்று இடம்பெற்ற இரண்டாம் நாள் இசை வேள்வியில் நாதஸ்வர வித்துவான்களின் மங்கல இசையைத் தொடர்ந்து கானகலாநிதி நெய்வேலி ஆர்.சந்தான கோபாலனின் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது. அத்தோடு நேற்று காலை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் சங்கீத கலாபூசணம் எஸ். கணபதிப்பிள்ளையினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'இசை பயிலரங்கம்' என்னும் கருத்தரங்கு நிகழ்வு நாதவாணி பம்பாய் ஜெயஸ்ரீயினால் நடத்தப்பட்டது. பல்வேறுபட்ட இராகங்கள், ஸ்வரங்கள் பற்றியும், பாடகி ஒருவர் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் என்ன என்பது பற்றியும், ஒரு பாடகியின் உயர்வுக்குக் காரணமான விடயங்கள் என்ன?, குரலினுடைய பயன்பாடுகள், குரலை எங்கே எப்படி பயன்படுத்து வது என்பது பற்றியும் தான் கற்றுக் கொண்ட அனுபவங்களில் இருந்து பம்பாய் ஜெய ஸ்ரீயால் கருத்தரங்கில் கூறப்பட்டது.
இக்கருத்தரங்கில் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்கள், பாடசாலை சங்கீத ஆசிரியர்கள், நுண்கலைப் பீட மாணவர்கள், மட்டக்களப்பு விபுலானந்தாக் கல்லூரி மாணவர்கள், இசை ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
இக்கருத்தரங்கின் தொடர்ச்சி இன்றும்காலை 9.00மணிக்கு கம்பன் மணிமண்டபத்தில் இடம்பெற உள்ளது இன்று நடைபெறும் இந்தக் கருத்தரங்கை கான கலாநிதி நெய்வேலி அர்.சந்தான கோபாலன் நடத்தவுள்ளார்.
அதனை தொடர்ந்து மாலை நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.
(த-21)

## விவசாய அமைச்சின் செயலாளர் மாரடைப்பால் சாவு



யாழ்ப்பாணம்.நவ.16
வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய உதுமாலெப்பை முகமது ஹால்தீன் நேற்று முன்தினம் இரவு மாரடைப்பினால் உயிரிழந்தார்.
இலங்கை நிர்வாக சேவை விசேட தரம் வகுப்பு - 1 ஐச் சேர்ந்த இவர் மீள்குடியேற்றம் மற்றும் இடர் நிவாரண சேவைகள் அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய போது முள்ளிவாய்க்காலில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களில் அடிப்படைத் தேவைகளுக்காகப் பல்வேறு நலத் திட்டங்களை முன்னெடுத்தவர்.
அதனைத் தொடர்ந்து 2010 ஆம் ஆண்டிலிருந்து வட மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப் பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.
(த-14)

# முன்னாள் போராளி கொலை; கைதானோர் வவுனியாவுக்கு

யாழ்ப்பாணம், நவ. 16
மன்னாரில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த முன்னாள் போராளியின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நான்கு பேர் பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடங்களில் கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருள்கள் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணேசபுரம் வெள்ளாங்குளத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து முன்னாள் போராளியான கிருஷ்ணசாமி நகுலேஸ்வரன் (வயது - 40) கடந்த புதன்கிழமை இரவு 8.30 மணி அளவில் [illegible] சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் நான்கு பேர் அழைக்கப் பட்டுத் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களே கைது செய்யப் பட்டு வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சடலம் அநுராதபுரம் வைத்திய சாலையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டது. அவரின் சடலம் இன்று ஞாயிற்றுக்கிழமை அடக்கம் செய்யப் படவுள்ளது. அதனை எரிக்காது புதைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. அங்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் நிறுத்தப்பட்டுள்ளனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து அங்கு மோப்பநாய் சகிதம் விசாரணை மேற்கொண்ட போது பொலிஸ் மோப்ப நாய் ரி - 56 ரக துப்பாக்கி ஒன்றையும் ரவை வெற்றுக் கோது ஒன்றையும் முகர்ந்து கண்டறிந்தது. அவை உள்ளிட்ட சான்றுப் பொருள்களே பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. சுட்டுக் கொல்லப் பட்டவரின் மனைவி வெள்ளாங்குளம் ஜி.ரி.எம். எஸ். பாடசாலையில் ஆசிரியராக வுள்ளார். இரண்டு சிறார்களும் உள்ளனர். தற்காலிக வீட்டில் வசிக்கும் அவருக்கு இந்திய வீட்டுத் திட்டம் கிடைத்து வீடு கட்டும் பணி இடம்பெற்று வருகின்றது. அவர் மேசன் தொழில் செய்பவர் என்பதால் அவரது வீட்டுக்கு அவர் உள்ளிட்ட மூன்று பேர் கல் அரிந்து கொண்டிருக்கும் போது அவர் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## சாவுத் தண்டனைக்குள்ளான இந்திய மீனவர் நிலை என்ன?

### மத்திய அரசிடம் நீதி கோரி குடும்பங்கள் உண்ணாவிரதம்



இராமேஸ்வரம்.நவ.16
இலங்கை நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்ட மீனவர்களின் நிலை தொடர்பில் தெளிவான முடிவை எட்ட மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரி குறித்த மீனவர்களின் குடும்பங்கள் நேற்று முதல் திடீர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 5 மீனவர்களையும் போதைப் பொருள் கடத்திய குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தொடர்ந்து சிறை வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 30 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

மீனவர்களின் தூக்குத் தண்டனைத் தீர்ப்புக்கு மீனவர் சமுதாயமும், அரசியல் கட்சிகளும் கண்டனங்களைத் தெரிவித்துவரும் நிலையில் தூக்குத் தண்டனைக்கு எதிராக மேல் முறையீடும் செய்யப்பட்டுள்ளது.

எனினும் மீனவர்கள் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் எதுவும் இலங்கை அரசிடம் இருந்து அறிவிக்கப்படாத நிலையில், இதற்கு மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி மீனவர்களின் குடும்பங்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. (த-14)

## டோறா மோதி உடைந்தது கட்டு மரம்

யாழ்ப்பாணம், நவ. 16
கடற்படையினரின் அதிவேகப் டோறாப் படகு மோதியதில், மீனவர்களின் கட்டுமரம் துண்டு துண்டாகிய சம்பவம் பருத்தித்துறை, கற்கோவளம் கடற்பரப்பில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

கடற்கரையில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் கட்டுமரத்தில் இருவர் மீன்பிடித்துக் கொண்டிருந்துள்ளனர். நேற்றுக் காலை 7.10 மணியளவில், கடற்படையினரின் அதிவேக டோறாப் படகு கட்டு மரத்தின் மீதேறிச் சென்றது. இதனால் கட்டு மரம் பாவிக்க முடியாத நிலைக்குச் சேதமடைந்தது.

அத்துடன் அதில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இருவரும் கடலினுள் வீழ்ந்துள்ளனர். இதன் பின்னர் ஒருவாறு நீந்திக் கரை சேர்ந்துள்ளனர். கடற்படையினரின் படகு மோதியதில், கட்டுமரம் முழுமையாகச் சேதமடைந்ததுடன், வலைகளும் முற்றாக நாசமாகியுள்ளன.

இது தொடர்பில் கற்கோ வளம் கடற்தொழிலாளர் சங்கத்தில் மீனவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். (த-5)

## 20 இலங்கை மீனவரை விடுவித்தது பங்களாதேஷ்

பங்களாதேஷில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 20 பேரையும் அவர்களது 4 படகுகளையும் அந்த நாட்டு அரசு நேற்று விடுவித்தது. விடுவிக்கப்ப்ட்ட மீனவர்கள் படகுகளுடன் இன்னும் ஒரு வாரத்தில் இலங்கையை வந்தடையவுள்ளனர்.

நீர்கொழும்பு மற்றும் மாத்தறை மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் பங்களாதேஷ் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப் பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களது படகுகளையும் பங்களாதேஷ் அரசு தடுத்து வைத்திருந்த நிலையில் மீனவர்களை விடுவிக்கக் கோரி இலங்கை மீன்பிடி அமைச்சு கோரிக்கை விடுத்திருந்தது. இந்த நிலையில் மீனவர்களை அந் நாட்டு அரசு விடுவிக்க உத்தர விட்டுள்ளது. (த-14)

## மூன்று நாள்களில் முடிவு தெரியும்

### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்

எதிர்வரும் 72 மணித்தியாலங்களில் 'ஜனாதிபதித் தேர்தலொன்று தொடர்பிலான முதலாவது செய்தியை வழங்குவதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றியபோதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான அறிவித்தல் விடுக்கப் பட்டு 45 நாள்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அரசமைப்பில் குறிப் பிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் கருத்து வெளியிட்ட அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி ஜனவரி மாதத்தின் முதலிரண்டு வாரங்களுக்குள் ஒன்றாக இருக்கும் என குறிப்பிட்டுள்ளார். (5)

## கலைத்தூது அழகியல் கல்லூரியின் பரிசளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 16
திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுகிழமை முற்பகல் 10 மணிக்கு இலக்கம் 286, பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியின் அதிபர் திருமதி அஞ்சலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித்திணைகளத்தின் அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மதிவாணி விக்னராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரி கடந்த 2006ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இடம் பெறுகின்ற 6ஆவது பரிசளிப்பு விழா இதுவாகும். (த)

## முக்கொலைச் சந்தேக நபர் நேற்று தற்கொலை முயற்சி

யாழ்ப்பாணம், நவ. 16
அச்சுவேலியில் இடம்பெற்ற முக்கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் யாழ் . சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் தற்கொலைக்கு முயன்று சிகிச் சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

முக்கொலை புரிந்த குற்றச் சாட்டில் விளக்கமறியலில் உள்ள தனஞ்செயன் என்பவரே அவ்வாறு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். கடும் பாதுகாப்புக்கு மத்தியில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

நேற்று அதிகாலை அவர் மாத்திரைகளை ஒன்றாக உட்கொண்ட நிலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் அவர் தற்கொலை செய்யும் முயற்சியாக அவ்வாறு செய்தாரா என்று கூறமுடியவில்லை. அவ்வாறு இருக்கலாம் அல்லது வேறு காரணங்களுக்காக அவர் அவ்வாறு செய்திருக்கலாம் என்று சிறைச்சாலை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

வேறொரு சம்பவத்தில் குடும்பஸ்தரைக் கொலை செய்து கிணற்றில் வீசிய குற்றம் நிரூபிக்கப்பட்ட அவரது மனைவி மற்றும் மற்றொரு குடும்பஸ்தர் ஆகியோருக்கு யாழ். மேல்நீதிமன்று கடந்த வியாழக்கிழமை தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது. இந்த நிலையில் தனஞ்செயன் அவ்வாறு செய்துள்ளார். (த-4)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 11 11
advt@uthayan.com


## மரண அறிவித்தல்



### கந்தையா செல்வநாயகம் (பேரம்பலம்)

வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை (வளசரவாக்கம்) வசிப்பிடமாகவும் கொண்ட வேலணை மேற்கு கிராமசபை (முன்னாள் அங்கத்தவர்) கந்தையா (குருந்தர்) செல்வநாயகம் அவர்கள் வெள்ளிக்கிழமை (14.11.2014) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (குருந்தர்), பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புனிதவதியின் பாசமிகு கணவனும், காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை, கார்த்திகேசு, ராசம்மா, சண் முகம், நாகராஜா (சிவலிங்கம்), இராசலட்சுமி மற்றும் நடராசா (சுடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, செல்லத்துரை, பரஞ்சோதியம்மா, குணவதி மற்றும் பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனனும், உலக நாயகி, நம்பிரான் ஆகியோரின் பாசமிகு அத்தானும், ஜோதிஸ்வர னின் சகலனும், கமலாதேவியின் அன்புச் சகோதரனும், வனிதா (ஜேர்மனி), வாசுகி (சுவிஸ்), புனிதன் (இந்தியா), சந்திரகாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜேந்திரன் (ஜேர்மனி), சந்திரபாலன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிதுலன், நவீன், வினிஸ், நிசிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்வர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்புகளுக்கு: 009 196 771 889 23

தகவல்: பெறாமகன், ப.தேவநாதன் (தேவன்) (54327)



## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு வதனா

மாதகலைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு வதனா நேற்று (15.11.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் வள்ளியம்மா தம்பதியரின் மகளும், திருநாவுக்கரசு (ரைவர்) அவர் களின் அன்பு மனைவியும், மயூரா, காண்டீபன் (சுந்தர்சன் ஊழியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சசிகரனின் மாமியாரும், காலஞ்சென்ற வசந்தா மற்றும் வள்ளுவன், வனிதா, ஞானசம்பந்தன் ஆகியோரின் சகோதரியும், அற்புதவிநாயகர், கேதாரகௌரி, ஸ்ரீதரன் மீனா ஆகியோரின் மைத்துனியும், சம்பவி, சமர்ந்தினி, குழலினி, எழிலினி, கௌரி சங்கர் ஆகியோரின் பேர்த்தியும்.சேனாதிராசாவின் சிறியதாயரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை 11.30 மணிக்கு வடலியடைப்பு இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மாதகல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

அரசடி வீதி,வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
077 045 6064

தகவல்: கணவர், பிள்ளைகள் (54327)



## மரண அறிவித்தல்



### ஞானமுத்து நல்லம்மா

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லம்மா ஞானமுத்து நேற்று (15.11.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானமுத்துவின் அன்பு மனைவியும், யோகராசா, யோகராணி, குமாரசாமி, அன்னலிங்கம், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் மகாலிங்கம் தவமலர், நவரத்தினம், கருணாதேவி, அமரர் கந்தாசமி ஆகியோரின் அன்புத் தாயாரும், றிற்ரா சிவராஜி, உருக்குமணி, யோகம்மா, கனகேஸ்வரி, பாலச்சந்திரன், அருந்ததி, பாலசிங்கம், கௌரி, தயானந்தராசா ஆகியோரின் அன்பு மாமியும் சிறிசங்கன், மைதிலி, வானவி, நிமா, உமாராம், செந்தில்குமார், ராஜ்குமார், கீதா, சதீஸ்குமார், அமரர் திருவேரவன்,சுஜி, துஷ்யந்தன், அமரர் துஷாந்தன், துசாஜினி, துவாரகன், சங்கர், சங்கீதா, உமாசங்கர், மோகனதாஸ், காஞ்சனா, லக்சனா, சசிகுமார், சிவகுமார், அமரர் உதயகுமார் மற்றும் தீபா, அனித், அரவிந்தன், அனித்தா, அஜந்தன், சுவர்னிகா, திலக்ஸ்சியன், திலக்ஷானா ஆகியோரின் பேர்த்தியும், சரஸ்வதி அமரர் மயில்வாகனம் மற்றும் அழகம்மா, தங்கமலர், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை வடக்கு உசந்தியோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி, ஊரெழு கிழக்கு (54328)

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## பேரம்பலம் ஞானசூரியன்

(ஓய்வுபெற்ற உள்ளூராட்சிமன்ற எழுதுவினைஞர்)



கொக்குவில் மேற்கு, மணியர்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் ஞானசூரியன் 14.11.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - பொன்மலர் தம்பதியரின் புதல்வனும், தேவகாந்தியின் (ஆசிரியை - பெரியபுலம் மகாவித்தியாலயம்) கணவரும், ஞானகலை (யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியை), ஞானரூபா (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், நவரத்தின ராஜா, பிரமானந்தன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், கீர்த்திகன், ரிஷிகேஷ் (லண்டன்), கிஷான் (லண்டன்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு. (54309) (45.6)

தகவல்: வே.நவரத்தினராஜா
(மைத்துனர்) 075 048 9697

## சங்கக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், நவ. 16

விசுவமடு மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் இன்று காலை 9 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. சகல பழைய மாணவர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# காணி விற்பனைக்கு

மந்துவில் வேம்பிராய் சந்திக்கு அருகில் மாத்தளாக் காடும், காளறைக் காட்டியும் என்னும் பெயருடைய 16 பரப்புக் காணி விற்பனைக் குண்டு.

விவரங்களுக்கு: T.P 077 234 6868

**மணமகள் தேவை** யாழ். இந்து கௌரவ குடும்பம் 5' 4" கிரக பாவம் குறைந்த B.Sc. பட்டதாரி கனடா Citizen ஆகவுள்ள மணமகனுக்கு 30-40 வயதுடைய படித்த மணமகள் தேவை; படம் Horscope விவரங்களை abicanada2014@gmail இற்கு அனுப்பவும். T.P: 077 438 9802
(Dowry not a matter) (54314) (4.6.3)

# கண்ணீர் அஞ்சலி

14.11.2014 இல் இறைபதமடைந்த வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன சுற்றாடல் அமைச்சின் செயலாளர்

## உதுமா லெப்பே முகமது கால்டீன்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, வடமாகாணம். (54308) (10)

# தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல கட்டடப் பொருள் கள் விற்பனை நிலையம் ஒன்றுக்கு கீழ்குறிப் பிடப்படும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. சிட்டை எழுதுநர் (Bill Cleark)
2. களஞ்சியக் காப்பாளர் (Store Keeper)
3. கணினி இயக்குநர் (Computer Operator)
4. கணக்கு எழுதுநர் (Account Cleark) பெண்கள்

மேற்குறித்த பதவிகளுக்கு தகுதியும் அனுபவ மும் உள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி 22/11/2014

**விளம்பர இல. 5029**

மே/பா உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/17726)

# நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

ஒரு மாதம் நிரம்பிய ஜேர்மன் செப்பற் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (54323)

தொடர்புகளுக்கு: 077 867 0780

# உடனடி வேலை வாய்ப்பு

பிரபல கல்வி நிறுவனம் ஒன்றிற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, திருகோணமலை, மன் னார் ஆகிய மாவட்டங்களில் பின்வரும் பதவிகள் வெற்றிடம் உண்டு.

பிரதேச வளவாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகள், முகாமையாளர்கள்.

(முன்பள்ளி ஆசிரியர்கள், காப்புறுதி முகவர்கள், விற்பனை முன்அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) (54315)

தொடர்பு: 0777 620090

# கிளி/எடிசன் கல்லூரியின் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்



B.A (கலைமாணி)
பட்டம் பெற்ற
**விஜயவசந்தன்**

Congratulations

Best Wishes!



B.B.M (முகாமைத்துவம்)
பட்டம் பெற்ற
**செ.ஜசோதரன்**

ஆகிய ஆசிரியர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள்
கிளி/எடிசன் கல்லூரி, கிளிநொச்சி

(47929)(10.6)

# அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் பிறந்ததின, பதவியேற்ற நாளை முன்னிட்டு அவர்களின் வாழ்வு சுபீட்சம் பெறவும் பணிகள் சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.



யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பிரதேச ஆலயங்களில் 18.11.2014 காலை 10 மணிக்கு விஷேட பூஜையும் மதியம் 12 மணிக்கு அன்னதானமும் இடம்பெறும். இதில் சகல மக்களும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1. செல்வ சந்நிதி முருகன் கோவில்
2. கச்சாய் அம்மன் கோவில் (சாவகச்சேரி)
3. முளாய் பிள்ளையார் கோவில்
4. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்
5. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில்
6. தம்பட்டி அம்மன் கோவில் ( தாரத்தனை)
7. கைலாசபிள்ளையார் கோவில் (யாழ்ப்பாணம்)
8. கோண்டாவில் பேருந்து நிலையம்
9. துன்னாலை கலிகை முருகன் கோவில்
10. கீரிமலை சிவன் கோவில்
11. யாழ் திருக்குடும்ப கன்னியார் மடம்
12. வேவில் பிள்ளையார் கோவில் (வல்வெட்டித்துறை)
13. நாகவிகாரை நயினா தீவு
14. கிளிநகர் சித்திவிநாயகர் ஆலயம்



அங்கஜன் இராமநாதன்
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளர்
அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள்

# விற்பனை

## டோமன் நாய்கள் விற்பனைக்கு
ஒரு வயது, 1½ வயது நிரம்பிய பெண் நாய்களும், 2½ வயது நிரம்பிய டோமன் இன ஆண் நாயும் உடன் விற்பனைக்குண்டு.
(54091)(12.6) தொடர்பு: 077 734 1994

## காணி விற்பனைக்கு
சித்தன்கேணி சந்தியிலிருந்து 200m தூரத்தில் பண்டத்தரிப்பு வீதியில் அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(54017)(12.3) தொடர்பு: 077 895 6773

## மல்லாகத்தில் வீடு விற்பனைக்கு
மல்லாகத்தில் குறைந்த விலையில் வீடு விற்பனைக்குண்டு.
(54270)(12.3) தொடர்பு: 077 470 2278

## விற்பனைக்கு
HONDA CBR 250 CC Motor Bike
New model 2012 பாவனை 8000 km
தொடர்பு: 077 559 8666 (54263)(4.6.3)

## காணி விற்பனைக்கு
உடுவில் தென்கிழக்குப் பகுதியில் உள்ள தோட்டக் காணி 9½ பரப்பு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 003 395 323 8533
071 856 1396/021 224 0952
(54038)(12.6)

## சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்குண்டு
சுண்டுக்குளியில் 2 பரப்புக் காணியில் 4 அறையும், 2 ஹோல், முழுவதும் மாபிள் பதித்த நல்ல தண்ணீர் கிணற்றுடனும் சகல வசதிகளுடனும் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: இல.16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
077 614 6434
(53224)(12.3.6)

## விற்பனைக்கு
BAJAJ DISCOVER 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு. XD xxxx
தொடர்பு: (54063)(12.6)
077 296 3496/077 299 0639

## காணி விற்பனைக்கு
உடுவில் மானிப்பாய் பிரதான வீதியில் (உடுவில் மகளிர் பாடசாலை அருகில்) 4½ பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. (54264)(5.6)
தொடர்பு: 077 543 8612 / 077 625 7972

## அறைகள் நாள் வாடகைக்கு
ஒருவருக்கு 600/=, இருவர் 1300/=,
நால்வர் 2000/=
6 Hours 450/= ஒருவருக்கு
**Hotel Villa City**
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 22 22. (C/16915)(10.6.3)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
45 நாள்கள் நிரம்பிய உயர்ந்தரக ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தடுப்பூசி போடப்பட்டுள்ளது
(53532)(12.3.6) தொடர்பு: 077 755 6244

## வீடு விற்பனைக்கு
இருபாலை சந்தி, கோண்டாவில் றோட்டில் 1½ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: S.ரமேஸ்,
077 372 2673
(54303)(12.6)

## விற்பனைக்கு
- தமிழ் ரைப்பிறைட்டர் 19' Long Carriage Halda.
- English ரைப்பிறைட்டர் 19' Long Carriage Optma.
- Morrice Minor Car 10 Sri - xxxx என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: க.நடேசன் சட்டத்தரணி,
மதவடி, வல்வெட்டித்துறை.
021 321 7725
(54096)(12.6)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## விற்பனைக்கு
புதிய கொண்டா இஞ்சின் 3 kg Made in Jappan மற்றும் எடுத்து ஒரு வருடமான நல்ல நிலையில் உள்ள Super ACE வடி வாகனம் விற்பனைக்கு.
(53964)(12.3) தொடர்பு: 077 512 3163

## வீடு விற்பனைக்கு
மூளாய் வீதி, மாவடி, வட்டுக்கோட்டையில் பிரதான வீதியில் 6 பரப்புக் காணியில் அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய வீடு வளவு விற்பனைக்குண்டு.
(54016)(12.3) தொடர்பு: 077 895 6773

## விற்பனைக்கு
நாரந்தனை வடக்கு பெரியபுலம் வீதியில் பாடசாலை கோவிலுக்கு அண்மையில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0773306047

## காணி விற்பனைக்கு
தெல்லிப்பழை, கொல்லங்கலட்டியில் வீடு, காணி + 9 பரப்புக் காணி விற்பனைக்கு.
தொடர்பு: 077 100 1390 (சி/17490)(4.6.3)

## விற்பனைக்கு
MORRIS OXFORD FARENA MODEL 3 - XXX MESSY FERGUSON 135 36 - 5XXXபெட்டி கலப்பையுடன்.
(54098)(12.3) தொடர்பு: 077 668 5999

## கார் விற்பனைக்கு
**NISSAN - B 11 - 14 - 6XXX**
(53950)(12.3) தொடர்பு: 077 619 4363

## கொழும்புத்துறையில் வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் 2 பரப்பு 11 ¼ குழியுடன் கூடிய சகலவசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
(54003)(12.3) தொடர்பு: 077 614 6434

## காணி விற்பனைக்கு
பச்சிலைப்பள்ளி பகுதி இயக்கச்சி, சங்கத்தார் வயல், கொடுவாப்பளை எனும் 58 ஏக்கர் 2ரூட் 18 பேச் விஸ்தீரணம் உடைய காணி உடன் விற்பனைக்குள்ளது. (A9 முகப்பாக கொண்டது). தரகர் தேவையில்லை.
(54298)(12.6) தொடர்பு: 077 782 8209

## விற்பனைக்குண்டு
லொறி Lanka Ashok Ley Land (Comet Super) விற்பனைக்குண்டு. (54274)(4.6.3)
தொடர்பு: 076 524 5022

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் (Town), மானிப்பாய் வீதியில் B.S. Lane (பள்ளிவாசலுக்கு அருகில்) 02 பரப்பு 02 குளியினை கொண்ட வீடுடன்கூடிய காணி விற்பனைக்குண்டு.
077 918 4617 / 0777 667 375
FLEX Graphic

## வாகனங்கள் விற்பனைக்கு
### பதிவு செய்யப்பட்ட வாகனங்கள்
இல.46, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம், கொமர்ஷல் லீசிங் பினான்ஸ் பி.எல்.சி வாகன சாலையில்

### வான்கள்
NP PB -xxxx டொயோட்டா TC TRH102V 2003
50 -xxxx டொயோட்டா 1983

### முச்சக்கர வண்டிகள்
| | | | |
|---|---|---|---|
| NP YB-xxxx | பஜாஜ் | AR 4S-UG | 2010 |
| NP YA-xxxx | பஜாஜ் | AR 4S-UG | 2010 |
| NP QK-xxxx | பஜாஜ் | AR 4S | 2007 |

### லொறிகள்
| | | | |
|---|---|---|---|
| NP LB-xxxx | இசுசு | NPR71LU5GY | 2000 |
| 41-xxxx | இசுசு | ELF | 1981 |
| NP LK-xxxx | இசுசு | NPR 81 | 2005 |

மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 5.00 மணி வரை வாகனங்களைப் பார்வையிடலாம்.
077 735 5392/077 052 3080
CLC கொமர்ஷல் லீசிங் பினான்ஸ் பி.எல்.சி (54265)(4.6.3)

# தேவை

## வீடு வாடகைக்குத் தேவை
அரசாங்க உத்தியோகத்தில் பணிபுரியும், இரண்டு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்திற்கு நல்லூர் திருநெல்வேலியை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
(54093)(12.6) தொடர்பு: 077 722 2262

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை
Litro Gas (லிற்றோ காஸ்) நிறுவனத்துக்கு முன் அனுபவம் வாய்ந்த விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. சம்பளத்துடன் +மேலதிக கொடுப்பனவு + மோட்டார் வாகனம் வழங்கப்படும். தகுதி உள்ளவர்கள் விளம்பரத் திகதியில் இருந்து ஏழு (7) நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல.5026,
C/o உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (53983)(12.3)

## காணி தேவை
தாண்டிக்குளம் பகுதியில் இருந்து புளியங்குளம் வரையிலான பகுதியில் A9 வீதிக்கு அருகில் 3 – 5 ஏக்கர் வரையிலான காணி தேவைப் படுகிறது. விற்பனைக்கு காணி உள்ளவர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.
(54254)(12.3) தொடர்பு: 077 307 0121

## தேவை
வட்டாவடி வாகனம் கூட்டுடன் தேவைப் படுகின்றது. விற்கவிரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
(54311)(12.6) தொடர்பு: 077 284 9535

## பணியாளர்கள் உடன் தேவை
கிளிநொச்சியில் இயங்கும் டிஜிட்டல் அச்சகநிலையம் ஒன்றில் கடமைபுரிய ஆண், பெண் தொழிலாளர்கள், கணினி வடிவமைப்பாளர்கள், றிசப்சனிஸ்ட் ஆகியோர் தேவைப் படுகின்றனர். சம்பளமும் ஏனைய சலுகைகளும் பேசித் தீர்மானிக்கப்படும்.
உடன் விவரங்களுடன் S.M.S செய்யவும்.
தொடர்பு: 077 943 5934 (47927)(4.6.3)

## பெண் ஊழியர் தேவை
வடமராட்சி மாலிசந்தியில் அமைந்துள்ள Mediclinic இல் பணிபுரிவதற்குப் பெண் பிள்ளைகள் தேவை.
(52000)(12.3) தொடர்பு: 077 209 4206

## VACANCY for Experience Only
**1. Cash Collector**
**2. Accounts Clerk**
Must Apply A/L Qualified only Send your CV to
**AMT Marketing & Distributors**
28, New Sivan Rd
Thirunelvely
e mail: amt.trans.jaffina@gmai.com

# வாடகைக்கு

## வாடகைக்கு
சாவகச்சேரி, மட்டுவிலில் புதிதாகக் கட்டிய கடைகள் வாடகைக்கு வழங்கப்படும். மருந்தகம் மற்றும் ஏனைய தேவைகளுக்கும் வழங்கப்படும். வீடு வாடகைக்குண்டு.
(47335)(12.3) தொடர்பு: 072 312 4193

## வாடகைக்கு
6ஏ, சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள மூன்று மாடி கடை வாடகைக்கு உடன் விடப்படும்.
தொடர்பு: 077 961 0084 (54280)(4.6.3)

## அறைகள் உண்டு
தூர இடங்களிலிருந்து உயர்தரக்கல்வி கற்பதற்காக வருகின்ற மாணவர்கள் நால்வருக்கு யாழ்.நகர மத்தியில் தங்குவதற்கு அறைகள் உள்ளன.
(54262)(12.3) தொடர்பு: 077 614 3133

## வீடு வாடகைக்கு
கொழும்புத்துறை சுவாமியார் லேனில் 5படுக்கையறைகளைக் கொண்ட விசாலமான சகல வசதிகளுடனும் (குளியலறை) வாடகைக்கு உண்டு. பிரயோசனங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
(53987)(12.3) தொடர்பு: 077 695 3776

# மணமக்கள் தேவை

## மணமகள் தேவை
- 80 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 23 பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
- 81 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 16½ பாவமுடைய வங்கி முகாமையாளருக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கர் வீதி,
பூங்கனிச் சோலையடி, முடமாவடி.
T.P:077-607 0862 (54282)(4.6.3)

## மணமகள் தேவை
1982இல் பிறந்த, 4இல் செவ்வாயும் சனியுமுடைய, 21 ¾ பாவக்கிரகம் அமைந்த அரச தொழில் செய்யும் ஆண் மகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. அரச உத்தியோகமாயின் விரும்பத்தக்கது.
(54069)(12.6) தொடர்பு: 077 850 1367

# கல்வி

## வகுப்புக்கள்
Ganaluksmi Academy னால் Beauty Culture Full Diploma, Advance Diploma Course, International Make up Artist, Cake Decoration Diploma Practicalலோடு தனிப்பட்ட கவனத்துடன் நடைபெறுகின்றன.
மற்றும் Birthday, Wedding Cake Order ஏற்றுக் கொள்ளப்படும்.
IHB City Guilds Certificates வழங்கப்படும்.
No.12 A Rideway Place Bambalgpitiya Colombo-04
No.124 A Center Road Mattakuliya Colombo-15 (சி/17808)
077 401 6404/011 254 0312 (4.6.3)

## இலவச சேவிஸ்
புதிய பஜாஜ் மோட்டார் சைக்கிள், ஓட்டோ கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு எம்மிடத்தில் இலவச சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.
இடம்: சந்நிதி முருகன் வேக்ஸொப் அன் சேவிஸ்
241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8076

## G.C.E (O/L) English Language 2014 Past Papers 10 Years
கடந்தகால வினாப்பத்திரம்
By N. SIVANANTHAN H.N.D.A CIMA
Qualified GENIUS INSTITUTE
184 A Navalar Rd Jaffna
Navalar Rd, Brown Rd சந்திக்கு அருகில்
T.P:071 310 6279/021 320 6656 (54285)(4.6.3)

# ஏனையவை

## இடமாற்றம்
### டயானா பிளாஸ்ரிக்
108, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி)
- உடைந்த வாகன பிளாஸ்ரிக் ஒட்டுதல்.
- பழைய பிளாஸ்ரிக் வாங்குதல்.
- புதிய பிளாஸ்ரிக் தயாரித்தல் (C/17542)(7.6.3)

தொடர்பு : 077 592 5088/021 222 8680

## Nick Advertaising International
புதிதாக ஆரம்பித்துள்ள கிளைக்கு வேலை வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.
தகைமை O/L, A/L போதுமானதாகும்.
**மேலதிக விவரங்களுக்கு:**
இல.175, முதலாம் குறுக்குத்தெரு,
வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
077 354 8006/075 987 5612 (54067)(10.6)

## வேலை வாய்ப்பு

டயர் விற்பனையில் பிரபல்யமான கம்பனிக்கு

**உதவிக்கணக்காளர்- பெண்**

* க.பொ.த உயர்தரசித்தி வர்த்தக பாடத்தில் அத்துடன் AAT தகைமை
* குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம்
* தமிழிலும், ஆங்கிலத்திலும் தேர்ச்சி QB- யின் பூரண அறிவு விரும்பத்தக்கது.
* 30 வயதிற்கு உட்பட்டவர்
* சிங்களம் பேசத் தெரிந்திருந்தால் மேலதிக நன்மையாகும்.

**விற்பனை நிறைவேற்று அதிகாரி/ பயிலுநர் விற்பனை நிறைவேற்று அதிகாரி**

* க.பொ.த(சா/த) சித்தி ஆங்கிலப்பாடம் உட்பட
* தமிழிலும், ஆங்கிலத்திலும் தேர்ச்சி விற்பனை தொடர்பான அனுபவம் விரும்பத்தக்கது.
* 30 வயதிற்கு உட்பட்டவர்

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும், ஊக்குவிப்பு தொகை வவுனியா பிரதேசத்தில் வசிப்பவர் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிவரங்களை கீழ்வரும் முகவரிக்கு தபாலிலோ, மின்னஞ்சலிலோ இரண்டு உறவினர் அல்லாத நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

regenttyre@gmail.com

(சி/17814) (4.6.3) General manager

REGENT TYRE COMPANY (PVT) LTD

INDUSTRIAL ESTATE POONT HOTTAM- VAVUNIYA

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayam.com

0215671111

## தவறிவிட்டது

வி.கிறிஸ்ரிகா குமாரசாமிபுரம், விசுவமடு என்னும் முகவரி கொண்ட M.B.S.L.லைவ் இன்சூரன்ஸ் புத்தகம் இல: KL00982 விசுவமடுவில் இருந்து புதுக்குடியிருப்பு வரையான பயணத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் விசுவமடு சிவில் பாதுகாப்பு தலைமைக்காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (47938)(12.6)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

அரச உத்தியோகத்தரின் தனிப்பாவனையிலுள்ள Scooty Pept.+, UE-xxxx (RED).

தொடர்பு: 077 306 6787 (54289) (12.6)

## வீடு வாடகை

யாழப்பாணம் இந்துக்கல்லூரிக்கு முன்பாக கே.கே.எஸ் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு நிறுவனத்துக்கு உகந்தது. வாகன தரிப்பிடம் உண்டு. தொடர்பு இலக்கம். 0718454015, 071190322

## பணிப்பெண் தேவை

கைதடியில் தங்கி நின்று வீட்டு வேலை செய்ய பணிப்பெண் தேவை.

தொடர்பு: 077 222 4913 (54306) (4.6.3)

## தேவை

ஓரளவு நல்ல நிலையிலுள்ள Honda Stunner 125 CC மோட்டார் சைக்கிள் உடனடியாக தேவை.

தொடர்பு: 077 228 8243 (54307) (4.6.3)

## ஐரோப்பாவில் உயர் கல்வி

Schengen Visa. (Lithuania, Latvia, Hungary, Sweden, Ireland ஆகிய நாடுகளுக்கான Student Visa)

No IELTS.

2015 February, March மாத அனுமதிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 2014 November 28.

குறைந்த செலவில் விரைவான சேவை.

நம்பகமானதும், உத்தரவாதமானதுமான சேவை.

UK விசா நிராகரிக்கப்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**COLOMBO HIGHER EDUCATION CONSULTANCY (PVT) LTD.**

No. 40, Galle Road, Wellawatte.

Tel: 0777-361230 / 071-8236915 / 011-7549600

web: checonline.com

E-mail: info.chec@gmail.com

FLEX Graphic


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




"எமது கல்லூரி ஆசிரியை திருமதி அமலராணி வில்மட் தியாகராஜா அவர்கள் 06.10.2014 அன்று நல்லாசிரியர் விருதான 'பிரதீபா பிரபா' விருதினை பெற்றுக்கொண்டார். இவர் மேலும் பல பட்டங்கள் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulation

கல்லூரிச் சமூகம், யா/ நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி.

(54290)(5.6)

## தரம்5 புலமைப் பரிசில் பாராட்டும் 10 ஆவது பிறந்த தின வாழ்த்தும்




16.11.2014

செல்வன் **யோகராசா பத்மபிரியன்**

(யாழ் இந்து ஆரம்ப பாடசாலை)

தரம் - 5 புலமைப் பரிசில் 2014 பரீட்சையில் 182 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டுவதோடு இவரை வழிப்படுத்திய ஆசிரியர்களையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். செல்வன் யோ.பத்மபிரியனை பல்கலையும் கற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துவோர்:

அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, பெரியப்பாமார், சித்தப்பாமார், மாமன்மார், மாமிமார், சித்திமார், மச்சான், மச்சாள்.

260. பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.

## 75 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**பாலன் தவயோகம் J.P**

(முன்னாள் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு ஊழியர் சம்மேளனத் தலைவர், முன்னாள் கட்டைவேலி ப.நோ.கூ.சங்கப் பணிப்பாளர்)

தக்குட்சம்பாதி துன்னாலை மேற்கு, கரவெட்டியைச் சேர்ந்த பாலன் தவயோகம் J.P தனது 75ஆவது பிறந்த தினத்தை நெல்லியடி வதிரியில் உள்ள ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்தில் இன்று (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை கொண்டாடுகின்றார். அவரை இன்னும் பல சீரும் சிறப்பும் பெற்று அவரை பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

happy birthday

(52008)(10.6)

வாழ்த்துவோர்:

மகன்-குகதாசன் (லண்டன்)
மகன்-தாசன்
மருமகள்-யமுனா (லண்டன்)
மருமகள்-தர்சினி
பேரப்பிள்ளைகள்-
விஸ்ணுகா (லண்டன்),
துளசிகா (லண்டன்)
பிரித்திகா மற்றும் குடும்பத்தினர்.

தாசன் இல்லம், துன்னாலை மேற்கு, கரவெட்டி.


## வீடு வாடகைக்கு

26/1, பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தில் 2 அறை, 1ஹோல், சமையலறை ஆகிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 941 6086 (54304) (4.6.3)

## புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

* தையல் பயிற்சி வகுப்புக்கள்

சுரிதார், சாறி பிளவுஸ் அடிப்படை வடிவமைப்புக்களுடன் நவீன டிசைன்களும் உள்ளடங்கலாக

காலம்: சனி, ஞாயிறு தினங்களில் பி.ப 2.00 மணிக்கு

திகதி: 23.11.2014

* சமையல் கலை பயிற்சி வகுப்புக்கள்

இலங்கை, இந்தியன், பிறநாட்டு உணவு, சிற்றுண்டி வகைகள்.

காலம்: வெள்ளி, சனி தினங்களில்

திகதி: 23.11.2014

பயிலுநர் மட்டுப்படுத்தப்பட்ட தொகையே உள்வாங்கப்படுவர்.

அனுமதிகளை தொலைபேசி மூலமாகவோ, நேரடியாகவோ பதிவு செய்து கொள்ளுங்கள்.

T.P:077 524 2852/021 568 8645

மைபுதரா ப(f) ஷன் மந்திர் (சி/17723)

71, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர். (4.6.3)

## ஐரோப்பா நாட்டில் சுற்றுலாப் பயணம்

சுற்றுலாவுக்கு தேவையான சகல ஏற்பாட்டுடன், விசா சட்ட ஆலோசனை வழங்கப்படும்.

**STUDY IN UK, CANADA, EUROPE, SINGAPORE, MALAYSIA**

Student / Visit / Tourist / Business Visit / Special Occasions

flex Institute — Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.

Hotline: 0777 761 346

Tel : 2364157 Fax : 2501766

www.flexinstitute.lk

FLEX Graphic

## CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE

(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm



FLEX Graphic

Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## பங்குதாரர்கள் தேவை

Blooming Buds பாடசாலையில் மேலதிக வகுப்பறை வசதிகள் காணப்படுகின்றன. ஆசிரியர் பயிலுநர் வகுப்பறை தெமட்டகொடை கொழும்பு 09 இலும் காணப்படுகின்றது. எங்களது நிறுவனத்தை நாடெங்கிலும் பரவ 5 லட்சம் முதலீடு செய்யக்கூடிய பங்குதாரர்கள் தேவை. முதலீடு செய்பவர்களுக்கு பங்குலாபமும், நிறுவனத்தில் பங்காளர் பதவியும் வழங்கப்படும். இந் நிறுவனத்தில் முதலீடு செய்ய விரும்புவோர் இந்த முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

390/2/1 Base line Rd, Dematagoda, Colombo 09.

0715569541/ 0754933349/0771529731/0112677541/0113066461

Government Reg. Pv 94034

## CAR விற்பனைக்கு



NP HH XXXX Nissan Sunny N16 Supper Saloon Full Option, SilverColour, Leather Seats, A/C, Fog Lamps, Auto gear, Alloy Wheels, New Battery Remote Key, Power mirror, Power Strering. Rs. 19,50,000/= (Negotiable)

தொடர்புக்கு: 077 452 7452

## பதவிவெற்றிடங்கள்

அற்லான்ரா வைத்தியசாலை

இல.54, உடுவில் றோட்,

மருதனார்மடம்.

பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

01.வரவேற்பாளர்
02.தாதிகள்
03.பரிசோதனைக்கு இரத்தம் எடுப்பதில் அனுபவமுள்ளவர்கள்
04.காவலாளி

தகுதியுடையோர் நேரில் வரவும்.

நேர்முகத் தேர்வு: 19.11.2014, 20.11.2014

நேரம் 12.00-2.00 மணி வரை நடைபெறும். (54283) (4.6.3)

## கேரள ஆயுர்வேத மருத்துவம்

* புற்றுநோய்
* ஈரல் பாதிப்புக்கள்
* மூட்டுவலி, முதுகுவலி
* புரொஸ்ட்ரேட்பிரச்சினை
* ஒற்றைத்தலைவலி
* சைனஸ் பிரச்சினை.
* மனஅழுத்தம்
* இருமல், சளி
* படுக்கைப்புண்கள்.
* நீரிழிவுப்புண்கள்
* பக்கவிளைவுகள்
* நரம்புத்தளர்ச்சி பாதிப்பு
* பாலியல் குறைபாடு
* மண்குஷ்டம்

**மூட்டுவலி**




மூட்டுவீக்கம்
வாதரோகம்
உடல் அசைவில் வலி
விரல், மூட்டு,தோள் வலி
வீக்கம், இறுக்கம்
முதுகுவலி,
இடுப்புக்கீழ் வாயு

எமது மருந்து உடல் அசைவை இலகுபடுத்தும் வலியை குறைக்கும்.

தினமும் இலவச ஆலோசனைக்கு

செலிங்கோ ஹவுஸ்

வார நாட்கள் மு.ப 9.00 - மாலை 5.00

சனிக்கிழமை மு.ப 9.00 - பி.ப 2.00

மாதாந்த கிளினிக் நாடு முழுவதும்

FAIR PHARMA (PVT) LTD

கேரள ஆயுர்வேத மருத்துவம்

011 4 388 200, 4 388 100, 4 388 101, 4 388 102

செலிங்கோ ஹவுஸ், 11ஆம் மாடி, இல.69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.

Website : www.ayurveda.lk

E-mail : fairpharmasrilanka@yahoo.com

Hotline: 0777 555 600 / 0777 708 310 / 0777 708 330

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வரப்போகும் ஒன்றரை மாதங்கள் மிக மிக முக்கியமானவை

தேர்தல் காய்ச்சல் முழு அளவில் பரவ ஆரம்பித்துவிட்டது. ஆங்காங்கே பரப்புரைகளுக்கான அச்சாணிகளும் அடிக்கப்பட்டுவிட்டன. ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறுதியாக இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றாலும், ஜனவரி முதல் வாரத்தில் அது நடக்கும் என்பது உறுதியாகி விட்டது. ஜனவரி 8 அல்லது 13ஆம் திகதிகளை தேர்தலுக்கான இலக்காக வைத்து அதிகாரிகள் பணிகளை ஆரம்பித்து விட்டார்கள். அடுத்த வாரத்தில் அனேகமாக உத்தியோகபூர்வ அறிவிப்பு வந்துவிடும்.

அதன் பின்னர் வரப்போகின்ற ஒன்றறை மாதங்கள் காலம் இலங்கையில் வாழ்கின்ற இனச் சிறுபான்மையினருக்கு - தமிழ் பேசும் மக்களுக்கு - மிக முக்கியமானவை. இந்தக் காலப் பகுதியில்தான் சகல அரசியல் பேரங்களும் நடக்கப் போகின்றன.

மஹிந்தவுக்கும் கடந்த இரண்டு முறைகளைப் போன்று இந்தத் தேர்தல் அமையாது என்பது திண்ணம். கடந்த இரண்டு முறைகளையும் போன்று இந்த முறை வெற்றியை உறுதி செய்ய முடியாது மஹிந்தவும் திணறி வருகிறார். அதே நேரத்தில் பொது வேட்பாளர் ஒருவரை அடையாளம் கண்டு முன்னிறுத்த முடியாமல் எதிர்க்கட்சிகளும் திணறி வருகின்றன. எனவே இரு தரப்புகளுமே வெற்றியை உறுதிப்படுத்துவதற்கான பேரம் பேசல்களில் மிகத் தீவிரமாக ஈடுபடப்போகும் காலம் இது.

அகிம்சை வழியிலான போராட்டமும் ஆயுத வழியிலான போராட்டமும் மற்றொரு போராட்டக் காலத்துக்கு இடம்விட்டுச் சென்றுள்ள தமிழ் அரசியல் சூழ்நிலையில், இது மிக முக்கியமான காலகட்டம். தமிழர் தரப்பும் முஸ்லிம்கள் தரப்பும் இதனை எப்படிக் கையாளப் போகின்றன என்பது மிக முக்கிய கேள்வி. இன்னுமொரு தசாப்த காலத்துக்கு நாட்டின் எதிர்காலமும் இனச் சிறுபான்மையினரின் எதிர்காலமும் இந்த ஒன்றரை மாத சாணக்கியக் காய் நகர்த்தல்களின் ஊடாகவே தீர்மானிக்கப்படப் போகின்றன.

வாக்குறுதிகளை அள்ளி வழங்கி, தேவைப்பட்டால் உடன்பாடுகளில்கூடக் கையெழுத்திட்டு வெற்றியைப் பறித்துவிட ஜனாதிபதிக் கனவோடு வளையவரும் அனைத்துத் தரப்புகளுமே தயாராக இருக்கின்றன. ஆனால், அந்த வாக்குறுதிகளும் உடன்பாடுகளும் நிறைவேற்றப்படுமா என்பது தான் கேள்விக்குரியது. இதற்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத வரலாறு மஹிந்தவுக்கு உண்டு. நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாகச் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறிய வரலாறும் அவருக்கு உண்டு. தான் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுக்களில் இணக்கம் கண்ட விடயங்களை ஓரமாக ஒதுக்கிவிட்டு, இப்போது 13ஆவது திருத்தம் மட்டும்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வே என்பது போலப் பேசும் வரலாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கும் உண்டு. சமாதானத் தேவதையாக வந்து சாவுகளின் தேவதையான வரலாறு சந்திரிக்காவுக்கும் இருக்கிறது.

ஜனாதிபதி வேட்பாளர்கள் தரும் வாக்குறுதிகள் மற்றும் உடன்படிக்கைகளை நம்புவது கடினம். அதே தருணத்தில் தமிழர்களின் முன்பாக இந்தப் பேரம் பேசும் தருணங்களைவிட மதிப்பு மிக்க தருணங்கள் இப்போது இல்லை. எனவே ராஜதந்திர ரீதியாக இந்தத் தருணங்களை பெறுமதிமிக்கவையாக மாற்ற முயலவேண்டியது கால நிர்ப்பந்தம். அத்தோடு வாக்குறுதிகளையும் உடன்படிக்கைகளையும் ஏற்றுக்கொள்பவர்கள் செயற்படுத்த வைப்பது அதனைவிட முக்கியம்.

எனவே இந்தப் பேரம் பேசல்களின்போது ஐ.நா. போன்ற மூன்றாவது சக்திகளின் நடுநிலைமையின் அவசியம் குறித்தும் தமிழர் தரப்புச் சிந்திக்க வேண்டும்.

# மலையக உறவுகளை அரவணைக்கும் கூட்டமைப்பு

■ கந்தவனம் கோணேஸ்வரன்

இயற்கையின் சீற்றங்களை மனிதனால் தடுத்துவிட முடியாது. ஆனால், அச்சீற்றங்களால் ஏற்படும் மனித உயிரிழப்பைத் தடுத்துக் கொள்ளவோ அல்லது குறைத்துக்கொள்ளவோ மனித சக்தியால் முடியும். இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் முன்னரேயே அவற்றைக் கண்டறியும் திறனை அறிவியல் ரீதியாகப் பெற்றிருக்கும் மனிதன் கொஸ்லாந்தை மீரியபெத்தை மண்சரிவு பேரிடரின்போது தனது திறமையைச் சரியாகப் பயன்படுத்தினானா என்ற கேள்வி எழுகிறது.

2004 இல் கடற்கோள் இடர் இலங்கையின் கரையோர மாவட்டங்களை அப்படியே சுருட்டி விழுங்கியது. பல்லாயிரக்கணக்கான உயிர்கள் ஓரிரு நிமிடங்களில் காவு கொள்ளப்பட்டன. விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகள் தொடக்கம் வீதியில் நின்ற இளைஞர், பெரியவர்வரை அனைவரையும் ஊருக்குள் புகுந்த கடல்நீர் வாரிச்சென்றுவிட்டது. பல கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுடைய சொத்துகள் நாசமாயின.

இது எதிர்பாராத பேரிடர். இது நிகழ்ந்து சிலமணி நேரத்துக்குள்ளேயே அரசு தன்னைச் சுதாகரித்துக்கொண்டது. நிவாரண வேலைகள் தொடங்கப்பட்டன.

தங்களை அழிப்பதற்காகவே தங்கள் தாயகத்தில் நிலைகொண்டிருந்ததாகத் தமிழர்களால் வெறுத் தொதுக்கப்பட்ட படையினர் கிழக்குப் பகுதிகளில் தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதிலும், உடல்களை மீட்டெடுப்பதிலும் உதவி புரிந்தனர்.

தமிழர்களைச் சிங்களவரும், சிங்களவர்களைத் தமிழர்களும் சந்தேகத்துடன் பார்த்துவந்த நிலைமை கணப்பொழுதில் மாற்றமடைந்து பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவுவதற்காகச் சிங்களமக்கள் தங்களால் கொண்டுவரமுடிந்த பொருள்களோடு குரோதத்தை மறந்து வந்து நின்று உதவினார்கள். இளநீர், பழவகை, பால் என அவர்கள் தங்கள் சக்திக்கேற்ப தாராளமாக உதவினார்கள். எந்த விளம்பரங்களும் இல்லாமல் இலங்கையர் என்ற உணர்வுடன் செயற்பட்டார்கள்.



திருகோணமலை நிலைமையைப் பார்வையிடவந்த அன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாடசாலை ஒன்றில் தங்கியிருந்த மக்களைப் பராமரிப்பதில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலி உறுப்பினர்களுடன் கைகுலுக்கித் தனது பாராட்டுதல்களைத் தெரிவிக்கும் அளவுக்கு இனக்குரோதம் தளர்ந்துபோயிருந்தது. அழிந்துபோன நாட்டைக் கட்டியெழுப்புவதே அனைத்துத் தரப்பினருக்கும் முக்கிய பணியாகப்பட்டது.

ஆனால், நிலைமை சீரடையத் தொடங்கியதும் இருதரப்பு அரசியல்வாதிகளும் தத்தமது வார்த்தை ஜாலங்கள்மூலம் மக்களைத் தமிழர்கள் என்றும் சிங்களவர்கள் என்றும் வேறுபடுத்திக் கொண்டார்கள். தமது அரசியல் அத்திபாரத்தை மீளவும் இறுக்கமாகப் புதுப்பித்துக்கொண்டார்கள். முல்லைத்தீவு அழிந்தபோது பதுங்குகுழிக்குள் வசிக்கும் விடுதலைப்புலிகளின் தலைவர் அழியாமல் இருந்திருப்பாரா என்று சில அரசியல்வாதிகள் தமது இயலாமைக் குணத்தின் கொடூரத்தை வார்த்தைகளால் கொட்டித் தமிழர்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டார்கள்.

எனினும், கணத்துக்குக்கணம் கடற்கோளின் தாக்கங்கள் வேகமாகத் துடைத்தெறியப்பட்டு புதிய உற்சாகத்துடனான வாழ்வைக் கட்டியெழுப்புவதில் அனைத்துத் தரப்பினரும் தமது முழுச் சக்தியைப் பிரயோகித்து உதவினார்கள். அரசும் அரசு சார்ந்த நிறுவனங்களும், பொதுமக்களும் போட்டி போட்டுக்கொண்டு பாதிக்கப்பட்ட பகுதிகள் மீண்டெழக் கடுமையாக உழைத்தார்கள். சில நாள்களிலேயே இலங்கைத்தீவு தனது இழப்புகளை உதாசீனப்படுத்தியபடி உற்சாகத்துடன் செயற்படத் தொடங்கியது.

இந்தப் பேரழிவின் கணக்கெடுப்புகள் உடனடியாகவே மேற்கொள்ளப்பட்டிருந்தன. இறந்தோர் தொகை பல்லாயிரக்கணக்காக இருந்தபோதிலும் அந்த எண்ணிக்கை துல்லியமாகக் கண்டறியப்பட்டது. இந்த எண்ணிக்கையில் கருத்து வேறுபாடுகள் எழவில்லை. ஆளுக்கொரு எண்ணிக்கையை வெளிப்படுத்தி அழிந்துபோனோரை யாரும் கொச்சைப்படுத்தவில்லை. உயிர்தப்பியோரின் மனங்களையும் புண்படுத்தவில்லை.

கடற்கோளால் நிகழ்ந்த பேரழிவுடன் ஒப்பிடும்போது ஒக்டோபர் 29 ஆம் திகதி கொஸ்லாந்தை, மீரியபெத்தையில் இடம்பெற்ற மண்சரிவின் அழிவு மிகமிகக் குறைவானதே. இருந்தும் இழப்பு அளவீடுகள் ஒருவாரமாகியும் சரியாக மேற்கொள்ளப்படவில்லை என்றே மக்கள் கருதுகிறார்கள். மண்ணில் புதையுண்டோரின் எண்ணிக்கை ஐநூறுக்கும் அதிகமாக இருக்கலாம் என ஆரம்பத்தில் நம்பப்பட்டு வந்த போதிலும் இன்று அந்த எண்ணிக்கை முப்பத்தெட்டே தான் என அரசு தரப்புச் சொல்லத் தொடங்கியிருக்கிறது. மண்மேடு முழுவதும் அகற்றப்படாத நிலையிலேயே அரச தரப்பால் இந்த எண்ணிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

உண்மையாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை முப்பத்தெட்டு என்பதைவிட மேலும் குறைவாக அமையின் அது துயரத்தின் அளவைக் குறைக்கின்ற செய்தியாகவே இருக்கும் என்பதில் எவருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால், இந்தக்கணக்கு முள்ளிவாய்க்கால் அவலத்தின் போது அரசு வெளியிட்ட கணக்குப்போல் ஆகிவிடுமா என்ற அச்சம் மக்கள் மனதில் எழாமல் இல்லை.

உடனடியாக அரசு செயலில் இறங்கியபோதிலும் இன்று வரை மண்மேடு முழுமையாக அகற்றப்படவில்லை. புதையுண்ட உடல்கள் அத்தனையும் மீட்கப்படவில்லை. படைத்தரப்பார் கடுமையாக உழைத்தபோதிலும் மலையகத்தின் சீரற்ற காலநிலை அவர்களது முயற்சிக்கு இடையூறு செய்துகொண்டே இருக்கிறது. இந்தநிலையில் மீட்புப்பணி நிறைவுற இன்னும் சில வாரங்கள் தேவைப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆயினும், மண்சரிவு இடரால் ஏற்பட்ட துயரத்தைக் காட்டிலும் பெரிய துயரம், கடந்தகாலங்களில் இந்த மக்கள் அதிகாரிகளாலோ அரசியல் வாதிகளாலோ ஒருபோதும் கவனிக்கப்படாதவர்களாக இருந்தமைதான். மண்சரிவு நிகழ்ந்தபோது அந்தப்பகுதியில் எத்தனைபேர் இருந்தார்கள்: அந்தப் பகுதியில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை ஆகிய விடயங்கள் இன்றுவரைக்கும் குத்துமதிப்பாகத்தான் வெளிவந்துகொண்டிருக்கின்றனவே தவிர துல்லியமாக எவராலும் இதுதான் சரியான எண்ணிக்கையென்று அறுதியிட்டுக்கூற முடியவில்லை.

இந்தக் குளறுபடிகள் மீரியபெத்த மக்கள் மட்டுமல்ல மலையகத் தமிழ் மக்கள் எவரும் இந்நாட்டுப் பிரசைகளுக்குரிய உரிமைகளோடு வாழவில்லை என்பதைத் தான் காட்டுகின்றன

மலையக அரசியல்வாதிகளால் மலையக மக்களுக்கு எவ்வித பயனுமில்லை என்பதற்கான மிகப்பெரிய சாட்சியே இந்த மண்சரிவு பேரிடர்.

மீரியபெத்தயில் மண் சரிவு இடம்பெறக்கூடும் என்ற தகவலைக்கூடத் தெரிந்து கொண்டிராத அமைச்சர் பெருமகனார் வாழ்கின்ற பிரதேசம் அது. வாக்குகளைப் பெற்றுக் கொண்டு அரசுக்கு ஆலவட்டம் பிடித்து தங்கள் வாழ்வை முன்னேற்றிக்கொள்வதைத் தவிர, மலையக அரசியல்வாதிகளிடம் வேறு இலட்சியம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

இவர்களை இனிமேலும் நம்பிப் பயனில்லை என்றாகிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் தெரிவித்திருக்கிறார்கள். வட மாகாணசபைக்கும் மலையக மக்களின் துயர்துடைக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு இருக்கிறது என்பதை வடமாகாண முதலமைச்சர் தனது நடவடிக்கைகள்மூலம் தெரியப்படுத்தியிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மலையக மக்களின் நலனில் அக்கறை கொள்வதை மலையக அரசியல்வாதிகள் நிச்சயமாக விரும்பப்போவதில்லை. அவர்களின் விருப்பமின்மையையும் மீறி மலையக மக்களை அரவணைக்கவேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கிறது.


இலங்கை அரசு மலையக மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுத்தாலோ குடியிருப்புக் காணிக்கு உரிமம் வழங்கினாலோ அவை மலையக மக்களின் உயிரிழப்புகளாலும் அவலங்களாலும் பெறப்பட்டனவாகத்தான் அமையுமேயொழிய மலையகத் தமிழ் அரசியல்வாதிகளின் முயற்சியினால் அல்ல என்பதை அந்த மக்கள் இனிமேலாவது உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்தப் பேரவலம் மலையக மக்களின் வாழ்க்கை நிலைமையை உலகுக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறது; மலையக அரசியல்வாதிகளின் அரசியற் பம்மாத்துகளை நன்றாகவே தோலுரித்துக் காட்டியிருக்கிறது.

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 193

# நீரிழிவால் நரம்புப் பாதிப்பு

இன்றைய யுகத்திலே நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு அவஸ்தைப்படுவோர் பலர். நீரிழிவு நோயானது பரம்பரைக் காரணிகளாலும், உணவுப் பழக்கங்களினாலும் ஏற்பட்டாலும் அதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். மேலும் நீரிழிவு கட்டுப்பாடில்லாமல் காணப்படின் குருதியின் வெல்லமட்டம் கூடி அவை நரம்புக்கலங்களின் கவசங்களைப் பாதிப்பதாலும், கலங்களுக்குத் தேவையான குளுக்கோசு கிடைப்பது குறைவதாலும் நரம்பு சம்பந்தமான பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடுகின்றது.
அந்த வகையில் நீண்ட காலமாக நீரிழிவு நோய் உடையவர்களது சாதாரண முறைப்பாடு கால் பாதங்கள் விறைக்கின்றன; காலில் காயங்கள் ஏற்படுவது தெரிவதில்லை; வயிறு பொருமலாக உள்ளது போன்றவையாகும். இவையெல்லாம் நரம்புப் பாதிப்பாலேயே ஏற்படுகின்றன. எமது உடலில் நரம்புகள் மின்னிணைப்பு கேபிள்கள் போல மூளையிலிருந்து சமிக்ஞைகளைக் கடத்துகின்றன. இந்த நரம்புக் கணத்தாக்கம் தொடர்ச்சியான தன்மையாக இடம்பெறுகின்றது. இதன் மூலமே நோ, வலி, உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. நீரிழிவு நிலையில் இந்த நரம்புகள் தாமாகவே அன்றி உயர் வெல்லமட்ட உறுத்துதலாலேயே பாதிப்பை எதிர்நோக்குகின்றன. நரம்புக்குக் குருதியை வழங்கும் சிறுகுருதிக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதாலும் இந்த நிலை ஏற்படலாம். இதனால் கணத்தாக்கம் தடைப்பட்டு சரியான உணர்திறனை வெளிப்படுத்துவதில் சிக்கல் ஏற்படுகிறது.
இந்த நரம்புப் பாதிப்பானது, பின்வருமாறு வெளிக்காட்டப்படலாம். சுற்றயல் நரம்புப் பாதிப்பு அறிகுறியாக தொடுதலை அல்லது தூண்டுதலை உணரும் தன்மை குறைவடைதல், ஊசியால் குத்துவது போன்ற அல்லது கால்கள் பாரமாக இருப்பது போன்ற உணர்வு, அடிப்பாதங்கள் எரிவது போன்ற உணர்வு என்பன ஏற்படுவதுடன் தசை நார்கள் பாதிப்படைந்து அவற்றின் தோற்றத்திலிருந்து மாறுபடும். மேலும் தன்னாட்சி நரம்புத் தொகுதி பாதிக்கப்படுவதால் குருதியில் வெல்ல மட்டம் குறைவதால் ஏற்படும் அறிகுறிகளைக் கூட அறிய முடியாத நிலை ஏற்படலாம்.
தலைச்சுற்று, கூடிய நேரம் நிற்க முடியாமை, உடல் நிலை மாறும் போது குருதியமுக்கம் குறைவடைதல், குடல் நரம்பு விநியோகம் பாதிப்பதால் வயிற்றோட்டம், குமட்டல், வாந்தி, சலத்தை முழுமையாகக் கழிக்க முடியாமல் இருத்தல், உணவு உட்கொள்ளும் போது வியர்த்தல் மற்றும் மலட்டுத்தன்மைக்கு காரணிகளின் 'ஒன்றான ஆண் குறி விறைப்படைதலில் தாமதம் போன்ற பாதிப்புக்களைக் காணலாம்.



இதனைத் தடுப்பதற்காக அல்லது இதனால் ஏற்படும் பாதிப்புக்களின் தீவிரத் தன்மையைக் குறைப்பதற்காக சில செயற்பாடுகளைச் செய்யலாம். அந்த வகையில் குருதியில் வெல்லமட்டத்தைச் சரியாகப் பேணும் வகையில் சரியான மருத்துவ ஆலோசனை (கிளினிக்) பெறல், பாதிப்புக்களின் அறிகுறிகள் சிறிய அளவில் வெளிப்படுத்தப்படும் போதே அவற்றைச் சரி செய்யலாம். சில விற்றமின் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் போது ஓரளவு குறைக்கலாம். மேலும் கால், பாதங்கள் விறைப்பதனால் உணர்திறன் குறைவடைந்து காயம் ஏற்படக்கூடிய வாய்ப்பைத் தவிர்க்க பாதங்களுக்கு மிருதுவான முழுமையாக மூடக்கூடிய காற்றோட்ட வசதியுடைய குதிக்காலில் பூட்டி வைக்கக் கூடிய பாதணிகளைத் தெரிவு செய்ய வேண்டும்.



பாதங்களுக்குக் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இரவில் பாதங்களைக் கழுவி ஈரமில்லாது துடைத்து சரியாக கவனிக்க வேண்டும்.

ஓரிடத்திலிருந்து எழும்பும் போது அல்லது படுக்கையிலிருந்து எழும்போது சிறிது நேரம் எழுந்து இருந்த பின்னர் உடல் நிலையை மாற்றலாம். பாதங்களுக்குக் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இரவில் பாதங்களைக் கழுவி ஈரமில்லாது துடைத்து சரியாக கவனிக்க வேண்டும். சாப்பிடும்போது வியர்த்தல், சத்தி, குமட்டல் போன்றவற்றுக்கு மருத்துவ ஆலோசனையுடன் சிறிதளவு உணவை இடைவெளியில் உட்கொள்ள வேண்டும். சலப்பையிலிருந்து சலம் முழுமையாக வெளியேறாவிடின் வயிற்றில் கீழ்நோக்கிய திசையில் சிறிய அமுக்கம் பிரயோகிக்கலாம். ஆண் குறி விறைப்படைதலைத் தூண்ட செயற்கை முறையான பல பொறி முறைகள் உள்ளன. வைத்திய ஆலோசனையுடன் அவற்றைப் பிரயோகிக்கலாம். தம்பதியினருக்கான உளவள ஆலோசனைகளையும் பெறலாம். நீரிழிவின் பாதிப்பைக் குறைத்து தீவிரமடையாமல் எம்மை நாம் கவனித்து நலமோடு வாழ்வோம்.

*பத்மராசா பத்மநிருபன்,*
*தாதிய உத்தியோகத்தர்,*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

# எண்ணெய் தோய்ந்த சுன்னாகம் மண்ணை

## என்ன செய்யப் போகிறோம்?

பகுதி-3

சுன்னாகம் மண்ணிலும் அதன் நிலத்தடி நீரிலும் கலந்துபோயிருக்கும் பெருமளவிலான எண்ணெய்ப் படிவுகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தவிர்ப்பதற்கும் இந்த மண்ணைத் தூய்மைப் படுத்துவதற்கும் இனி என்ன செய்யலாம் என்பது பற்றி சிந்திப்பது பயனுடையதாக இருக்கும்.
முதலாவதாக எண்ணெய்க் கலப்பு நடந்திருக்கும் பகுதிகள் தெளிவாக இனம் காணப்பட்டு அந்தப்பகுதி மக்களுக்கு மாற்று குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படுவது நல்லது. அத்துடன் இந்தப் பகுதியில் வாழும் மக்கள் நிலத்தடி நீரை குடிப்பதற்கோ சமையலுக்குப் பாவிப்பதைத் தவிர்த்துவிடவேண்டும். இதற்கு மேலதிகமாக புதிதாக சுற்றாடலிலோ அல்லது நிலத்தடி நீரிலோ எண்ணெய்க் கலப்பு நடந்துகொண்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சுற்றாடல் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்வது முக்கியமானதொன்றாகும். சுன்னாகம் மின்உற்பத்தி நிலையப் பகுதியின் மண்ணிலே எங்காவது எண்ணெய் செறிவு மிக அதிகமாகக் காணப்பட்டால் அந்தப்பகுதி மண்ணை அகழ்ந்து எடுத்து அப்புறப்படுத்துவதன் மூலம் புதிதாக எண்ணெய் நிலத்தடி நீரைச் சென்றடைவதைக் கட்டுப்படுத்த முடியும்.
இந்தப் பிரதேச மக்களுக்கு வேறு பகுதிகளில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வந்து விநியோகிப்பதை விட எண்ணெய்க் கலப்பு இடம்பெற்றுள்ள பகுதி நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்து அதனைச் சுத்திகரித்து மக்களுக்கு விநியோகித்தால் அந்தப் பகுதி மக்களின் குடிதண்ணீர் தேவை பூர்த்தி அடைவதுடன் நிலத்தடி நீரில் கலந்து போயிருக்கும் எண்ணெய்ப் படிவங்களும் படிப்படியாக அகற்றப்படுவதற்கு வசதியாக அமையும். அத்துடன் தொடர்ச்சியாக உறிஞ்சி எடுக்கும் பகுதியை நோக்கி நிலத்தடி எண்ணெய்ப் படிவங்கள் நகரும். இது நிலத்தடி எண்ணெய்ப் படிவங்கள் அகற்றப்படுவதை இலகுவாக்கும். கடல்நீருடன் கலந்திருக்கும் எண்ணெய்களை அகற்றுவதற்குச் சில பக்றீரியாக்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் நிலத்தடி நீரில் கலந்துபோயிருக்கும் எண்ணெய்களை அகற்றுவதற்கு இந்த முறையைப் பயன்படுத்த முடியாது.
இந்தப் பிரதேச மக்களுக்குப் புதிதாக ஏதாவது சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றனவா என்று மருத்துவக் குழுக்கள் விழிப்புடன் இருக்க வேண்டிய தேவை இருக்கிறது. அத்துடன் இந்தப் பிரதேசத்து மக்களிடையே அவர்களின் ஆரோக்கிய நிலை சம்பந்தமான ஆய்வுகளும், மருத்துவக் குழுக்களினால் ஆரம்பிக்கப்படவேண்டிய நிலை எழுந்திருக்கிறது. ஏதாவது சுகாதாரப் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டால் அது சம்பந்தமான நடவடிக்கைகளும் ஆய்வுகளும் விரிவு படுத்தப்பட வேண்டும்.
இந்தப் பகுதி நிலத்தடிநீரை விலங்குகளோ அல்லது பறவைகளோ அருந்த விடுவதற்கு முன்னர் அந்த நீரை சிறிதளவு நேரம் ஒரு பாத்திரத்திலோ அல்லது வாளியிலோ வைத்திருக்கும் பொழுது எண்ணெய்க் கலப்பின் பெரும்பகுதி நீரின் மேற்பரப்புக்கு வந்து சேரும். அதன்பின்னர் அந்த மேற்படலத்தை அகற்றியபின் அதனை பறவைகளும் விலங்குகளும் அருந்த விடலாம். இதன்மூலம் கோழி, ஆடு, மாடு போன்றவை இந்த எண்ணெய் கலப்பினால் தாக்கப்படும் வீதத்தைக் குறைத்துக்கொள்ளலாம். இவற்றிலே எண்ணெய்த் தாக்கம் ஏற்பட்டால் அவற்றிலிருந்து பெறப்படும் முட்டை, இறைச்சி என்பவற்றின் தரத்திலும் மாற்றங்கள் ஏற்படலாம்.
இந்தப் பிரதேசத்திலே விளையும் விவசாய உற்பத்திப் பொருள்களான மரக்கறி வகைகள், பழ வகைகள், தேங்காய் என்பவற்றிலே கழிவு எண்ணெயில் காணப்படும் ஏதாவது இரசாயனப் பதார்த்தங்கள் செறிவடைந்திருக்கின்றனவா என்பதைக் கண்டறிய ஆய்வுகள் ஆரம்பிக்கப்படுவது அவசியமாகும். இந்த விவசாய விளை பொருள்களை மனிதர்கள் பாவிப்பது பாதுகாப்பானதுதானா என்பதைக் கண்டறியும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.
நிலத்தடி நீருடன் கலந்துபோயிருக்கும் எண்ணெய், இயற்கையான நிலத்தடி நீரோட்டத்தால் கழுவப்பட்டு கடலைச் சென்றடைய நீண்டகாலம் எடுக்கும். அதுவரை காத்திருக்க முடியாது. அவ்வாறு காத்திருப்போமாயின், அது பல சூழல் பாதிப்புகளையும், சுகாதாரப் பாதிப்புக்களையும் ஏற்படுத்திவிடும். எனவே பலமுனைகளில் பல்துறைசார் விற்பன்னர்களின் வழிகாட்டலில் பொருத்தமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டி இருக்கிறது. எண்ணெய்ச் செறிவு கூடிய பிரதேசங்களின் நிலத்தடி நீர் உறிஞ்சி எடுக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுவதன் மூலம் நிலத்தடிநீர் தூய்மையாகும் வேகத்தை விரைவுபடுத்த முடியும்.
ஒரு துறையினர் இன்னொரு துறையினர் மீது குற்றம் காண்பதை விடுத்து, இனி என்ன செய்யவேண்டும் என்பதையே பிரதான குறிக்கோளாகக் கொண்டு, ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு செயற்படுவோமாக இருந்தால் இந்த எண்ணெய்க் கலப்பால் ஏற்படக்கூடிய தாக்கங்களைக் குறைத்து அல்லது தவிர்த்து இந்த நிலையை வெற்றிகரமாகக் கையாள முடியும். அத்துடன் எதிர்காலத்திலும் இவ்வாறான நிகழ்வுகள் ஏற்படாமல் தடுத்துக்கொள்ளவும் முடியும்.

***சி. சிவன்சுதன்,***
*பொது வைத்திய நிபுணர்,*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

கார்த்திகை-01 திங்கட்கிழமை 17.11.2014
திதி: தசமி பி.ப.02.36 வரை
நட்சத்திரம்: பூரம் கா.06.56 வரை
சுபநேரம்: 12.08 - 01.38 வரை
இராகுகாலம்: 07.38-09.08 வரை

**மேடம்**: வெளியூர்ப் பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார்.

**இடபம்**: குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். உறவுகள் மத்தியில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்களைக் கலந்தாலோசித்து சில முடிவுகளை எடுப்பார்கள்.

**மிதுனம்**: மாறுபட்ட அணுகுமுறையால் பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புதிய பொருள்கள் கொள்முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கடகம்**: அடுத்தவர்களைக் குறை கூறுவதை நிறுத்துங்கள். நெருங்கியவர்கள் சிலரால் தர்மசங்கடமான சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் மறைமுக அவமானங்கள் வந்துநீங்கும்.

**சிங்கம்**: குடும்பத்தில் சின்னச் சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். எதிர்மறை எண்ணங்கள் வந்து போகும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**கன்னி**: சிலர் உங்களிடம் கேட்ட உதவியைச் செய்வீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**துலாம்**: உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். நம்பிக்கைக்கு உரியவர்களை ஆலோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பாராட்டப்படுவீர்கள்.

**விருச்சிகம்**: சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும்.

**தனுசு**: வேலைப்பளு அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் எவரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**மகரம்**: எதிர்பார்த்த இடத்திலிருந்து தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களைக் கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்**: ராஜதந்திரமாகப் பேசிக் காரியம் சாதிப் பீர்கள். உறவினர்கள், நண்பர்கள் உங்களைக் கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் உங்களுடைய கடின உழைப்பை உயர் அதிகாரி மெச்சுவார்.

**மீனம்**: நட்புவழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் வரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 9 | 4 | 1 | | 8 | 5 |
| 5 | | | 3 | | 7 | | | |
| | | 1 | 5 | | | | 6 | |
| 9 | 4 | 6 | | | 2 | 8 | | |
| | | 3 | | | | 1 | | |
| | | 7 | 6 | | | 4 | 9 | 3 |
| | 1 | | | | 3 | 9 | | |
| | | | 8 | | 9 | | | 4 |
| 7 | 9 | | 4 | 1 | 6 | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 4 | 5 | 2 | 6 | 8 | 1 | 7 |
| 8 | 7 | 5 | 9 | 1 | 4 | 3 | 6 | 2 |
| 6 | 1 | 2 | 8 | 7 | 3 | 4 | 5 | 9 |
| 2 | 3 | 9 | 4 | 6 | 1 | 7 | 8 | 5 |
| 7 | 5 | 6 | 3 | 8 | 9 | 2 | 4 | 1 |
| 4 | 8 | 1 | 7 | 5 | 2 | 9 | 3 | 6 |
| 9 | 6 | 8 | 1 | 4 | 7 | 5 | 2 | 3 |
| 1 | 4 | 7 | 2 | 3 | 5 | 6 | 9 | 8 |
| 5 | 2 | 3 | 6 | 9 | 8 | 1 | 7 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# மரண அறிவித்தல்



## திருமதி பராசக்தி (ரெத்தினம்) சிவகுருநாதர்

யாழ்.கச்சேரி கிழக்கைப் பிறப்பிடமாகவும், பாரதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி (ரெத்தினம்) சிவகுருநாதர் நேற்று (15.11.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவகொழுந்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சிவகுருநாதரின் அன்பு மனைவியும், வரலக்சுமி, தனலக்சுமி, உதயசூரியன், தாமரைச்செல்வி, கமலவாசினி (சுகாதாரப்பகுதி - யாழ்.மாநகரசபை), காலஞ்சென்ற விஜயலக்சுமி ஆகியோரின் பாசமிகு தாயும், சுப்பிரமணியம், இரவீந்திரநாயகம் (இத்தாலி), திருலோகநாதன் (நேரக்கணிப்பாளர் தனியார் போ.வ), கலைச்செல்வன், நந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியும், காயத்திரி, நித்தியா (பிரான்ஸ்), ரூபன், சாந்தன், பிரியா, மகிந்தன், யசிந்தன், கனிஷ்டன், துலக்ஷன், துவாரகன், துலஷ்சனா, சுரேஸ், ஸ்ரீகாந் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், திபக்ஷனாவின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், பூபாலசிங்கம் மற்றும் பவளராணி (கிளி), இராஜேஸ்வரி, லீலாவதி, புஸ்பராஜா (ராசன்), குணசிங்கம், பரமேஸ்வரி, முருகையா, கோபாலசிங்கம் (ரெத்தினம்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான யோகராஜா, சின்னையா, கோபாலகிருஷ்ணன் மற்றும் சண்முகராஜா, அருளாநந்தம், சிவபாக்கியம், ஜெயலக்சுமி, நகுலேஸ்வரி, சிவசோதி, கலாமதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8 A, பாரதி வீதி,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம். (54276) (12.3)

தகவல்:
குடும்பத்தினர்.

# பத்தாம் ஆண்டு நினைவுகளில்...

நேர்மையுள்ளோர் உம் திருமுன் வாழ்வர் (திபா 140:13)




## அமரர் மரியாம்பிள்ளை யோசேப்பு

(முன்னாள் கிராமசேவை உத்தியோகத்தர் மற்றும் சமாதான நீதிவான்)

பத்து ஆண்டுகள் கடந்தது அப்பா
நீங்கள் இப்பாரினைப் பிரிந்து!
சுனாமி முதல் முள்ளிவாய்க்கால் வரை - எம்தேசம்
கண்டது பல இன்னல்கள்,
மாறியது எம் கிராமத்தின் தோற்றம்!
நிகழப் போவதை அறிந்த இறைவன்,
தீமை நடுவிலிருந்து அழைத்தான் உங்களைச் சீக்கிரம்!
உங்கள் கண்ணிய நடத்தையும், நேரிய சிந்தையுடனான சமூக சேவையும்,
ஒளிர்கின்றது எம் குடும்பத்தில்!
உங்கள் ஆன்மா என்றும் ஆண்டவர் சந்நிதியில் இன்புற்றிருக்க
இறைவனை இறைஞ்சுகின்றோம் அப்பா!!

(54026)(12.6)

தாளையடி

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



காலஞ்சென்ற ஐயம்பிள்ளை நடராசா
(மைதிலி நகை மாட உரிமையாளர்)
அவர்களின் பெறாமகன்

## இராஜலிங்கம் வருண்ராஜ்

12.11.2014 அன்று பிரான்ஸில் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வயது இருபத்தைந்தை அடைய இன்னும்
வரும் நாள் இரண்டிருக்க நின் இருபத்தைந்தாவது
வருட பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட
வருவாய் என்றிருந்தோம் வருண்ராஜே!
நீயோ உன் வருகைக்கான கணக்கு
நீங்கி விட்டதன நீண்ட தூரம் சென்றுவிட்டாய்
நாங்கள் இங்கு பெறாமகனாம் வருண்ராஜ்
நலங் காப்பான் என்றிருந்தோம் ஏமாற்றிவிட்டாய்
தாங்காது இதயம் வெடித்து விடும் போலுள்ளது
மங்காது நின் நினைவலைகள் எங்கள் இதயங்களில்
கண்கள் குளமாகின்றன கண்ணீர் வர மறுக்கின்றன
முக் கண்ணனின் காலடியில் சரணடைந்து
சாந்தி பெறுக.

மைதிலி நகை மாடம் (யாழ்ப்பாணம்)
யாழ். மைதிலி ஜுவலறிஸ் (கொழும்பு)

(சி/17645)(4.3.6)

உரிமையாளரும்,
ஊழியர்களும்,

# www. tra

## 148, Aluth mawatha

## Tel: 077 0


நம்ப முடியாத விலைகளில் உங்களது விமானப் பயணச் சீட்டுக்களை நீங்க
நீங்களாகவே பதிவுசெய்து கடனட்டைகளின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். எ
சீட்டினைப் பதிவு செய்து பார்த்தால் உங்களுக்கு இந்த உண்மை புரியும்
பெற்றுக்கொள்ளலாம். இது போலவே ஏனைய டிக்கட்டுக்களு
மத்திய கிழக்கு நாடுகளுக்கு நாமே மிக மிகக் குறைந்த விலைகளில் எமது W
வழங்குகின்றோம் என்பதை பெருமையுடன் தெரிவித்

**Muthu: 0777 881 656/ D**

## இவற்றைத் தவிர ஏனைய பயன்களாவன...

- எமது இந்த இணையத்தளத்தின் வாயிலாக உலகிலுள்ள எந்தவொரு **HOTEL** இனையும் நீங்கள் பதிவுசெய்துகொள்ள முடியும்.
- எமது **www.travelpass.com** என்ற இணையத்தளத்தின் மூலம் **Indonesia, China, Bangkok, Malaysia Myanmar, Vietnam, India, Dubai** மற்றும் **Singapore** மேலும் பல நாடுகளுக்கான் **Visa** வைப் பெற்றுக் கொள்வதற்கு தேவைப்படும் **Documents** பற்றியும் எமது **www.travelpass.com** என்ற இணையத் தளத்தின் வாயிலாக அறிந்து கொள்ள முடியும்.
- எமது இணையத்தளத்தின் வாயிலாக டிக்கட்டுக்களைப் பதிவு செய்யும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு கிழமைகளிலும் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். மாத முடிவில் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு குடும்பத்திற்கு 3 இரவுகள், 4 நாள்கள் **(2 Pax Bangkok** சுற்றுலா சென்று வர **Voucher** வழங்கப்படும்.

**Hotline : 077 788 1**


பயணத்திற்கு குறைந்த காலம்
எங்களது திறமைகளுக்கு முதலிடம்
நாட்டின் அபிவிருத்திக்கு துணை நிற்கும் தேசிய அதிவேக வீதி செயற்திட்டம். செயளபாக்கியத்துடன் வடக்கு மலைநாட்டு அதிவேக வீதி நிர்மாணப் பணிகள் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் சுப வேளையில் ஆரம்பித்து வைக்கப்படும்.
இந்நாடட்டின் சுதந்திரக் கல்வியினால் உருவாக்கப்பட்ட திறமைசாலிகளை தேசிய அபிவிருத்திக்கு பயன்படுத்தல் மஹிந்த சிந்தனையில் நிஜமாக்கப்பட்ட ஓர் அபிலாஷை ஆகும். அதற்கேற்ப வடக்கு அதிவேக வீதி நிர்மாணப் பணிகளுக்கு எங்களது பிள்ளைகளின் துணை வேண்டி நிற்போமாக. குறைந்த காலத்தில் எம் நாட்டினை அபிவிருத்தி அடையச் செய்வோம். எங்களது திறமைகளை உலகறியச் செய்வோம்.
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# பண்டைய கோட்டைகளை பாதுகாக்க நடவடிக்கை

கொழும்பு, நவ.16

இலங்கையிலுள்ள பண்டைய காலத்துக் கோட்டைகளைப் பேணிக்காத்து அபிவிருத்தி செய்யும் திட்டம் ஒன்று அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட உள்ளதாக மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகமான பேராசிரியர் காமினி அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அந்தத்திட்டத்துக்கு அமைய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலங்களைச் சேர்ந்த பண்டைய கோட்டைகளை செப்பனிட்டு அபிவிருத்தி செய்வதற்கு மத்திய கலாசார நிதியமும் தொல்லியல் ஆய்வுகள் திணைக்களமும் கூட்டாக இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளன.



முதற்கட்டமாக மன்னார், கல்முனை, பூநகரி ஆகிய இடங்களில் அமைந்துள்ள கோட்டைகளில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு பேணிப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கலாசார மற்றும் கலைத் துறைகள் அமைச்சர் ரீ.பீ. ஏக்க நாயக்கவால் நியமிக்கப் பட்டுள்ள ஆலோசகர்கள் குழு ஒன்றால் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதோடு, கோட்டைகளைச் செப்பனிட்டு அபிவிருத்தி செய்து உல்லாசப்பயணத்துறைக்கு பங்களிப்பை வழங்குவதே இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்காக உள்ளது.

அவற்றோடு அன்றைய ஆளுநரில் ஒருவரான 'டொறிக்'' வசித்த மன்னார், அரிப்பில் அமைந்துள்ள டொறிக் மாளிகையையும்கூட செப்பனிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

குறித்த ஆலோசகர்கள் குழு முன்னாள் தொல்பொருள் ஆய்வுகள் பணிப்பாளர் நாயகமும், மத்திய கலாசார நிதியத்தின் நிறுவுநருமான கலாநிதி ஹோலண்ட் சில்வாவின் தலைமையில் செயற்படுவதோடு, ஏனைய உறுப்பினர்களாக தொல்பொருள் ஆய்வுகள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திஸநாயக்க, மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் பேராசிரியர் காமினி அதிகாரி மற்றும் வாஸ்த்துக்கலை நிபுணர் ஆஸ்லிடி வோஷ் ஆகிய பிரமுகர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-22)






# மீள்குடியேற்றத்தின் பின் கோட்டைகட்டி பாடசாலையின் அபிவிருத்தி முன்னேற்றம்

## முல்லைத்தீவு அரச அதிபர் கருத்து






யாழ்ப்பாணம், நவ.16

மீள்குடியேற்றத்தின் பின் கோட்டைகட்டிய குளம் அரசினர் தமிழ் கலவன் பாட சாலையின் அபிவிருத் திகள் முன்னேற்ற கரமா னவை. கிராமப் புறங் களின் கல்வியூட்டும் ஆசிரியர்களின் கஷ்டங்கள், அர்ப்ப ணிப்புடன் செய்யும் சேவை களையும் பாராட்டினார் முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேத நாயகன். கோட்டைகட்டியகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் 40 ஆவது ஆண்டு விழாவும் பாடசா லையின் 2 ஆவது மலராக 'மாணிக்க கோட்டை' மலர் வெளியீட்டு விழாவும் பரிசளிப்பும் அண்மையில் பாட சாலை முதல்வர் இ.தங்கராசா தலைமையில் இடம்பெற்றது.


நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இதன்போது அவர் மேலும் கூறியதாவது:

"பாடசாலையின் அபிவிருத் திக்கு உதவுகின்ற சமூகத் தினரின் உதவிகள் பாட சாலைக்குக் கிடைக்கின்றன. இந்தப் பாடசாலை 40 வருடமாக கல்விப் பணியில் ஈடுபட்டு பல மாண வர்களை உயர் கல்விக்கு அனுப்பி வருவது பாராட்டத்தக்க விடயம். எதிர்வரும் காலத்தில் கல்வி, கல்விசார் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களின் உயர்வுக்காக ஆசிரியர்கள் பாடுபட வேண் டும்.

நிகழ்வில் 'மாணிக்க கோட்டை' நூலை கல்விப் பணிப்பாளர் த. செல்வரத் தினம் வெளியீட்டு வைக்க அரச அதிபர் நா.வேதநா யகன் பெற்றுக் கொண்டார்.

மலரின் இரண்டாவது பிர தியை முன்னாள் அதிபர் பொ. தனபாக்கியம் வழங்க மல்லாவி பிரபல வர்த்தகா இடபாளுடன் பெற்றுக்கொண் டார். சிறப்பு பிரதிகளை பாடசாலை அதிபர் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் அதிபர், ஆசிரியர், அயல் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ,மாணவர்கள், பொது மக்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர். (வ)




இக்காலத்து குடும்ப வாகனம்

உங்கள் முச்சக்கர வண்டி பஜாஜ்
ஆக இருக்கவேண்டியது ஏன்?



விலை ரூ. 492,380/-
இவ்விலை முன்னறிவித்தலின்றி மாற்றமடையலாம்.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

செலவு - மிகக்குறைவு!
எரிபொருள் சேமிப்பு - மிகக் கூடியது!
ஆசனம் - மிகசொகுசு!
சத்தம் - மிகக்குறைவு!
சேமிப்பு - மிகக் கூடியது!
தொழிற்பாடு - மிகவும் சிறந்தது!
பாவனைக்காலம் - மிகக் கூடியது!
மீள் விற்பனைப் பெறுமதி - மிகக் கூடியது!
உதிரிப்பாகங்களின் விலை - மிகக்குறைவு!
விற்பனை வலையம் - மிகப்பெரியது!
சேவை வலையம் - சிறந்த தொழிற்பாடுடையது!
பூரண நம்பிக்கை - மிகக் கூடியது!
முற்கொடுப்பனவு - மிகக்குறைவு!

35 வருட முன்னேற்றம்

மூன்று பரம்பரைகளாக, அவர்களின் உணர்வுகள் எண்ணங்களை பகிர்ந்ததுடன்,
அவர்களுக்கு நன்மையளித்து மேலும் முன்னோக்கி...

மேலதிக தகவல்களுக்கு அருகே உள்ள கிளையொன்றினை நாடுங்கள்.

tradlanka

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. துரித அழைப்பு: 0772-981050, 0772-981051, 0773-599977
தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677 மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

# வரணியில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாம்

யாழ்.மாவட்ட காசநோய் தடுப்பு அலுவலகம், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவை இணைந்து வரணி, கரம் பைக்குறிச்சி மேற்கு பொது மண்டபத்தில் கடந்த செவ் வாய்க்கிழமை இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்தின.

இந்த மருத்துவ முகாமில் யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி மருத் துவர் ஆர்.மணிவாசகர் தலை மையில் அந்தப்பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.ரூபகதாஸ் மற்றும் மருந்தாளர், பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சேவையை வழங்கினர்.

குறைந்த வளத்துடன் நிறைவான சேவை வழங்குதல் என்பது இந்தச் சேவையின் கோட்பாடாகும் எனறு மருத்துவர் ஆர்.மணி



வாசகர் தெரிவித்தார்.

மருத்துவமுகாமில் நோயாளர்களின் சளிப் பரிசோதனைக்காக அதன் மாதிரிகள் சேகரிக் கப்பட்டு யாழ்.மார்பு சிகிச்சை நிலையத்துக்கு பரி சோதனைக்கு அனுப்பப்பட்டதாகவும் சாவகச்சேரி, பருத்தித்துறை ஆதார மருத்து வமனைக்கு 'எக்ஸ்றே' பரிசோதனைக்கு நோயாளிகள் செல்ல ஆலோசனை வழங் கப்பட்டதாகவும் கூறப்பட்டது. அங்கு நோயாளி கள் நிறை, உயரம், உடல் திணிப்பு சுட்டி, இரத்தத்தில் குளுக்கோஸ் பரிசோதனை, உயர் குருதி அமுக்கம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. குறைபாடுகள் உள் ளோர் வரணி பிரதேச மருத் துவமனை யில் சிகிச்சைக்கு செல்ல ஆலோசனை வழங் கப்பட்டது. இதன்போது தொற்றா நோய்கள் குறித்த கண்காணிப்பு தொடர்பில் தனிநபர் பதிவேடுகளும் வழங்கப்பட்டன.

இதுமாதிரியான பரி சோதனை முகாம்கள் பிரதேச ரீதியாக தம்மால் நடத்தப் படுவதாக வும் இச்சேவையை விரும்புவோர் பிரதேச கிராமிய அமைப்புக்கள் ஊடாக சுகாதார பிரதேச அதிகாரி காரியாலயத்துக்கு விண் ணப்பிக்கு மாறும் வரணி பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். (வ-122)












# 60 ஆவது ஆண்டைப் பூர்த்திசெய்த மாநகரசபை சித்த மருத்துவப் பிரிவு

குருநகர், நவ.14

யாழ்.மாநகரசபையின் சித்த மருத்துவப் பிரிவு இயங்க ஆரம்பித்து இவ்வருடத்துடன் 60 வருடங்கள் பூர்த்தி யாகியுள்ளன என்று அந்தப் பிரிவின் தலைவராகப் பணியாற்றிவரும் மருத்துவர் அருந்ததி சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபையின் சித்த மருத்துவப் பிரிவின்கீழ் 9 இலவச சித்த ஆயுள்வேத மருந்த கங்கள் மக்களுக்கு இலவச ஆயுள்வேத சிகிச்சைகளை வழங்கி வருகின்றன. அவை களில் நல்லூர் இலவச சித்த ஆயுள்வேத மருந்தகம் நல்லூர் பிரதேச செயலகத் துக்கு அருகிலும், அரியாலை இலவச சித்த ஆயுள்வேத மருந்தகம் அரியாலை ஆனந் தன் வடலி வீதியிலும், நீராவி யடி இ.சி.ஆ.மருந் தகம் நீராவி யடி சைவபரிபாலன சபை அருகிலும், நாச்சிமார் கோயில் இ.சி.ஆ.மருந் தகம் நாச்சிமார் கோயிலடி அருகிலும், நாவாந் துறை இ.சி.ஆ.மருந்தகம் ஒஸ்மானியா கல்லூரி வீதியிலும், யாழ்.நகர இ.சி.ஆ. மருந்தகம் யாழ்.பெரிய கடையிலும், குருநகர் இ.சி.ஆ. மருந்தகம் குருநகர் நாலாம் குறுக்கு வீதியிலும், பாஷையூர் இ.சி.ஆ.மருந்தகம் பாஷை யூர் மகப்பேற்று நிலை யத்திலும், கொழும்புத்துறை இ.சி.ஆ மருந்தகம் கொழும் புத்துறை சுவாமியார் வீதியி லும் இயங்கி வருகின்றன.

யாழ்.மாநகரசபையின் சித்த மருத்துவப் பிரிவில் தனியே பொதுமக்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன் நின்றுவிடாது மூலிகைத் தோட்டப் பராம ரிப்பு, மருந்து உற்பத்தி மற்றும் விசேட சிகிச்சைப் பிரிவுகளான அக்குபஞ்சர், பஞ்சகர்ம சிகிச்சைகள், யோகா சிகிச்சைகள் ஆகிய வையும் அங்கு பணியாற்றும் மருத்து வர்களால் மேற் கொள்ளப்படுகின்றன.

மூலிகைகளை அடையாளம் காண விரும்புவோர், தேவைப்படுவோர் நல்லூரில் இயங்கும் யாழ்.மாநகர பையின் சித்த ஆயுள்வேத தலைமைக் காரியாலயத் துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற் றுக் கொள்ளலாம். குறித்த மருந்தகங்கள் அனைத்து அரச வர்த்தக விடுமுறை தவிர்ந்த நாள்களில் பொது மக்களுக்கு சேவை யாற்றி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-51)

# யாழ்ப்பாணம் நவீன சந்தை கட்டடப் பகுதிக்குள் ஒழுக்கு

## வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.16

யாழ்.நவீன சந்தை கட்டடப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் ஒழுக்கினால் வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப் பட்டு வருகின் றனர்.

கடந்த வியாழக்கிழமை பெய்த கடும் மழை யால் கூரையில் ஏற்பட்ட ஒழுக் கினால் நவீன சந்தை உட்பகுதி வெள்ளக் காடாகக் காணப் பட்டது.

திடீரென ஏற்பட்ட இந்த ஒழுக் கினால் மழை நீர் கட்டட தொகுதியில் உள்ள வர்த்தக நிலை யங்களுக்குள் உட்புகுந்தன.

சந்தைப் பகுதிக்குள்ளிருக்கும் மழைநீரை அகற்றுவதில் அவர்கள் மும்முரமாக ஈடுபட் டதோடு பொதுமக்களும் இதில் சிரமப்பட்ட னர்.

நவீன சந்தை கட்டடத்தின் கூரையில் ஏற்பட்டி ருக்கும் இம்மழை நீர் ஒழுக்குகளை சீர் செய்வ தற்கு மாநகராட்சி மன்றம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-17)

Skin & Hair Treatments
100% No Side effects! Guaranteed Results !!
முகப்பரு, கரும்புள்ளி,
பருவந்த குழி அடையாளம்
முகச்சுருக்கம், கருந்திட்டு
நிரந்தரமாக உரோமம் அகற்றல்
மரு / பாலுண்ணி அகற்றல்
தலைமயிர் வளர்ச்சியின்மை
பொடுகு தலைமயிர் உதிர்வு


முன்பதிவு இலவசம் :
0112361333 / 0777111988
Health Line Clinic
of Integrated Medicine
No: 40, 33rd Lane
Colombo-06
வடமாகாணத்தில் இந்நிறுவனத்தின் கிளை ஆரம்பிக்கப்படவுள்ளதால் புதிதாக முதலிட விரும்புவோர், அழகுக்கலை நிலைய உரிமையாளர்கள் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ளோர்(ஆண்/பெண் இருபாலாரும்) தொடர்புகொள்ளவும். —பயிற்சி இலவசம்!—






மழை ஓரளவு பெய்தும் கூட ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் கிணறுகள், குளங்கள் வறண்டு காணப்படுகின்றன. ஊர் காவற்றுறை பிரதேச சபை வளாகத்தில் உள்ள கிணறு நீரின்றிக் கிடப்பதைக் காணலாம். (வ-7)

# கட்டாக்காலிகளின் மேய்ச்சல் நிலமாகும் நெல்வயல்கள்

## கவலை வெளியிடும் விவசாயிகள்



காரைநகர், நவ.16

காரைநகரில் மேற்கொள் ளப்பட்ட நெற்செய் கையைக் கட்டாக்காலி கால்நடைகள் அழித்து துவம்சம் செய்வதாக விவசாயிகள் கவலை தெரி விக்கின்றனர்.

பயிர் வளர்வதற்கு மழை இல்லையே என்று விவசா யிகள் ஏங்கும் நிலையில் முளைத்த பயிர்களையும் கால் நடைகள் வகைதொகை யின்றி அழித்துவருவதால் விவசாயிகள் பெரும் இக் கட்டான நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளனர். கால்நடைகளைக் கட்டுப் படுத்த உரியவர்கள் நடவ டிக்கை எடுப்பார்களா அல்லது கால்நடைச் சொந்தக் காரர்களுக்காவது புத்தி வருமா என அங்கலாய்ப்பது மட்டுமன்றி அடுத்து மழைவருமா என்றும் ஏழைவிவ சாயிகள் கேள்வி எழுப்புகின்றனர். (வ-250)

# இலங்கைக்கு 10 மாதத்துக்குள் 2 இலட்சம் சுற்றுலாப் பயணிகள்

கடந்த 10 மாத காலத்துள் 12 இலட்சத்து 28 ஆயிரத்து 754 வெளிநாட்டு சுற்றுலாப் பயணி கள் இலங் கைக்கு வருகை தந்துள் ளதாக இலங்கை சுற்று லாத்துறை மேம்பாடுகள் பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டின் முதல் 10 மாத காலத்துள் இலங்கை வந்துள்ள சுற்றுலாப் பயணி களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது இந்த ஆண்டில் வெளிநாட்டு சுற்று லாப்பயணிகளின் வருகை 21.5 வீதத்தால் வளர்ச்சி கண்டுள்ளது என்றும் மேற்படி செயற்பாட்டுப்பிரிவு தெரிவிக்கின்றது.

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதி கார சபையால் வெளியிடப்பட்டுள்ள ஆகப்பிந் திய புள்ளிவிவர அறிக்கைகளுக்கு அமைய கடந்த ஒக்ரோபர் மாத முடிவில் இலங்கைக்கு 121, 575 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாக சுற்றுலாத்துறை மேம் பாடுகள் செயற்பாட்டுப் பிரிவு தெரிவிக்கின்றது.

கடந்த ஜனவரி மாதத்தில் 146,575 சுற்றுலாப் பயணி களும், பெப்ரவரியில் 141,878 பேரும், மார்ச் மாதத்தில் 133,048 பேரும் ஏப்ரலில் 112,631 பேரும் மே மாதத்தில் 90,046 பேரும் ஜூன் மாதத்தில் 103,175 பேரும் ஜூலை மாதத் தில் 133,971 பேரும் ஒகஸ்ட் மாதத்தில் 140,319 பேரும் செப்ரெம்பர் மாதத்தில் 105,535 பேரும் ஒக்ரோபர் மாதத்தில் 121,576 பேரும் என்றவாறு வெளி நாட்டு உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (வ-22)








மாதகல் சென்.யோசவ் மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் வி.நடராசாவின் பிரியாவிடையும் மணிவிழாவும் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் யோ.எ.பங்கிராஸ் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைசின் உதவிச் செயலாளர் திருமதி செ.சு.செபஸ்ரியன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்ததோடு. வண பிதா எமில்போல் பிரம்மஸ்ரீ செ.சுந்தரேச சர்மா ஆகியோர் ஆசியுரை வழங்கினர். (ஒ)




யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை, சாம்றோக் அக்கடமியில் அண்மையில் ஆசிரியர் தின விழா அதன் நிர்வாகி அ.றெக்ஸ் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக ஆசிரியர் வைகுந்தநாதன் கலந்து கொண்டார். (ஒ)





பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் அதிபர் செல்வி கிறேஸ் தேவதயாளினி தேவராஜா தலைமையில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினரான பாடசாலையின் பழைய மாணவிகள் சங்க கொழும்பு கிளைத் தலைவி திருமதி ரீ.ரட்ணம் மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (ஒ)



பூநகரி வேரவில் வெள்ளிப் பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கப்பட்டுள்ளது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சீருடைகளை ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ கு.யோகராசா மாணவர்களுக்கு வழங்கினார். (ஒ-10)

தகவல்: பெறாமகன் - நடராஜா செந்தில்குமார் - 071 411 8462

(சி17484)(12.3.6)

**இன்று முதல் மீண்டும் சிவப்பிரகாசம் வீதியில்**

**நத்தார் பண்டிகையை முன்னிட்டு**
**மாபெரும் சிறப்பு தள்ளுபடி**

வீட்டு, அலுவலக தளபாடங்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



அலுமாரி (வீட்டுபாவனைக்குரியது) ~~14500/=~~ 8990/=

மரக்கட்டில் ~~8750/=~~ 6100/=

பிளாஸ்டிக் கதிரை ~~900/=~~ 625/=



Sofa ~~45500/=~~ 32900/=

மெத்தை ~~4115/=~~ 2320/=

**15, சிவப்பிரகாசம் வீதி, (தட்டாதெரு சந்தி)**
**077 180 7672, 077 831 4201**
(C/17628)(10)

## பணிநிலை வெற்றிடம்

யாழ். நகரில் அமைய உள்ள முதல்தர பாலர் பாடசாலைக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

01.அதிபர்-(பெண்)
வெற்றிடம்-01
வயதெல்லை -50 இற்கு மேற்பட்டவர்கள்
தகைமை-மும்மொழித் தேர்ச்சி பெற்றவராகவும் பாடசாலை நிர்வாக திறமையுடையவராகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

02.ஆசிரியர்கள்-(பெண்கள்)
வெற்றிடம்-04
வயதெல்லை-21-35
தகைமை-மும்மொழித்தேர்ச்சியுடன், Montessori Diploma

03.வரவேற்பாளர் (பெண்)
வெற்றிடம்-01
தகைமை-மும்மொழியிலும் உரையாடும் ஆற்றல், மேலதிக கணினி அறிவு விரும்பத்தக்கது.
வயது-18-35 வரை

04.பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்-04 (இருபாலாரும்)
தகைமை-தெளிவான உரையாடல் (தமிழ், ஆங்கிலம்)
கல்விசார் நிறுவனத்தில் பணியாற்றிய முன் அனுபவம்
கல்வித்தகைமை- G.C.E (O/L) 6 பாடம் (கணிதம், ஆங்கிலம் உட்பட
வயதெல்லை-18-60

தகுதியுடையவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பங்களை 20.11.2014 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

(சி/17222) (4.6.3)
விளம்பரஇல.5028,
மே/பா உதயன் பனிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# குப்பிளான் கிராம பொன் விழா இன்று

வலி. வடக்கு, நவ 16

குப்பிளான் கிராம உதயப் பொன் விழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்குக் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் வி.செந்தில் குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா, சிறப்பு விருந்தினர்களாகக் கொழும்பு பொலிஸ் தலைமையகத் திட்டமிட்ட குற்றங்கள், போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசநாதன், மொறட்டுவ பல்கலைக்கழக பேராசிரியர் க.பாலசுப்பிரமணியம், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.ஐ.துஸ்மந்த உட்பட மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளார்கள். (த)

## காணியுடன் இணைந்த கடைத் தொகுதி விற்பனைக்குண்டு

கே.கே.எஸ் பிரதான வீதி, சுன்னாகத்தில் (Commercial Bank அருகில்) அமைந்துள்ள இரண்டு மாடிகள் கொண்ட கடைத்தொகுதி விற்பனைக்குண்டு. கட்டடத்தின் விலை மற்றும் ஏனைய விவரங்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: (54281) (12.3)

**021 224 0152, 077 315 0842,**

## சனச டிவலப்மென்ட் பேங்

SDBL

சனச டிவலப்மென்ட் பேங், எதிர்கால வளர்ச்சிக்கான உயிர்ப்பான நடவடிக்கைகளை எடுத்தும், வங்கித்துறையை நிலைநிறுத்தும் முகமாக திட்டங்களை வகுத்தும் செயற்படுத்தியும் வருகின்றது. அத்துடன் தனது செயற்பாடுகளால் நாட்டின் அபிவிருத்தியில் உயிர்ப்பான பங்களிப்பினை நல்கியுமுள்ளது. வெளிப்புறமான மாற்றங்களுடன், பன்முகப்படுத்தப்பட்ட வர்த்தக உத்திகளோடு அதிவேகமான வளர்ச்சியை அது நோக்கிப் பயணிக்கின்றது.

சுய உந்துதல் கொண்ட, இறுதி முடிவுகளை நோக்கிச் செயற்படக்கூடிய தனிநபர்கள், எமது வங்கியில் நீதிமன்ற எழுதுவினைஞர்களாக இணைந்து கொள்ள முடியும்.

# நீதிமன்ற எழுதுவினைஞர்கள்

தேவைப்படும் தகைமைகள்

- க.பொ.த (உயர் தர) பரீட்சையில், ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி
- க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில், ஆங்கிலம் உள்ளடங்கலாக ஆறு (6) பாடங்களில் சித்தி
- நீதிமன்ற எழுதுவினைஞர்களாக நிதியியல் நிறுவனம், கூட்டுத்தாபனம் அல்லது பிரசித்தி பெற்ற ஒரு சட்ட நிறுவனத்தில் 3 வருடங்களுக்கும் மேல் பணியாற்றிய அனுபவம் விரும்பத்தக்கது.
- நீதிமன்றப் பதிவுகள், மனுத் தாக்கல் செய்தல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பணிகளில் சிறந்த அறிவு
- கணினி அறிவும் சிங்கள மற்றும் ஆங்கிலத்தல் தட்டச்சு செய்தலும் மேலதிக அனுபவங்களாகக் கருதப்படும்

தேர்வு செய்யப்படும் தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு, இத்துறையின் தராதரங்களுக்கேற்ப ஏனைய நன்மைகளுடன் சேர்ந்த கவர்ச்சிகரமான சம்பளப்பொதியொன்று வழங்கப்படும்

உங்கள் விண்ணப்பங்களை, உறவினரல்லாத சிபாரிசுதாரர்களின் விபரத்துடன் ஏழு நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். விண்ணப்பிக்கும் பதவி தபாலுறையின் இடது புற மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.

JEBZ

தலைவர் மனிதவளம்
**சனச டிவலப்மென்ட் பேங் பிஎல்சி**
தலைமையகம், இல 12, எட்மண்டன் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06

## சனச டிவலப்மென்ட் பேங்

SDBL

சனச டிவலப்மென்ட் பேங், எதிர்கால வளரச்சிக்கான உயிர்ப்பான நடவடிக்கைகளை எடுத்தும், வங்கித்துறையை நிலைநிறுத்தும் முகமாக திட்டங்களை வகுத்தும் செயற்படுத்தியும் வருகின்றது. அத்துடன் தனது செயற்பாடுகளால் நாட்டின் அபிவிருத்தியில் உயிர்ப்பான பங்களிப்பினை நல்கியுள்ளது. வெளிப்புறமான மாற்றங்களுடன், பன்முகப்படுத்தப்பட்ட வர்த்தக உத்திகளோடு அதிவேகமான வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கின்றது.

அதனை வளர்ச்சிப் பாதையில் அதிவேகமாக இட்டுச்சென்ற வெற்றிமிக்க குழுவினைப் பலப்படுத்த வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இந்நோக்கத்தினை நிறைவேற்றும் முகமாக, தகுதிவாய்ந்தோரிடமிருந்து, வங்கியின் பயிற்சி நிர்வாகிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

# பயிற்சி நிர்வாகிகள்

பயிற்சியும் வேலைவாய்ப்பும்

பயிற்சி நிர்வாகிகள் வங்கித் துறையின் அனைத்துப்பிரிவுகளிலும் பயிற்சி பெறும் முகமாக ஒரு வருட பயிற்சிக்காலம் வழங்கப்படும். பயிற்சி நிர்வாகியாக நீங்கள் சாதகமான, உயர் உளச்சார்பு கொண்ட, வேலையில் சிறப்பான நடத்தை கொண்டவராக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவையனைத்தும் அவ்வப்போது மதிப்பிடப்படும் பயிற்சி நிறைவடைந்ததும், பயிற்சிகளில் சிறப்பாக தம்மை வெளிப்படுத்தி வெற்றிகண்டவர்கள், வங்கியின் நிர்வாக அதிகாரிகள் தரத்துக்கு நிரந்தரமாக உள்வாங்கப்படுவர். அவ்வாறு உள்வாங்கப்படுவோர் ஒரு வருட தகுதிகாண் காலத்தின் பின்னர் நிரந்தரமாக்கப்படுவர்.

த்கைமைகள்

- க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில், ஆங்கிலம் கணிதம் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சாதாரண சித்தி

அத்துடன்

- க.பொ.த. (உயர் தர) பரீட்சையில், (பொது ஆங்கிலம் தவிர்த்து) 2 பாடங்களில சாதாரண சித்தி

வயது : 30.11.2014 அன்று 24 வயதுக்குக் குறைவானவராக இருத்தல்

கீழ்க்குறிப்பிடப்படுபவை மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்

- ஆங்கிலம் மற்றும் சிங்களம்/ தமிழில் சிறந்த தொடர்பாடல்திறன்
- வங்கியியல்துறையில் முன்னனுபவம்
- MS Office இல் சிறப்பான அறிவு (Word, Excel, Power Point)

தகுதியானவர்கள் பிராந்திய அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்படுவர் அத்துடன் அக்குறிப்பிட்ட பிராந்தியத்திலேயே ஆரம்பத்தில் பணிக்கமர்த்தப்படுவர். இருப்பினும் தேர்வு செய்யப்பட்டவர், நாட்டின் எந்த பகுதியிலேனும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

தேர்வு செய்யப்படும் தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு, இத்துறையின் தராதரங்களுக்கேற்ப ஏனைய நன்மைகளுடன் சேர்ந்த கவர்ச்சிகரமான சம்பளப்பொதியொன்று வழங்கப்படும்

நீங்கள் தகுதியானவராக இருந்தால் www.sdb.lk எனும் இணையத்தள முகவரியினூடாக உங்கள் விண்ணப்பங்களை, உறவினரல்லாத சிபாரிசுதாரர்களின் கடிதத்துடன், 2014 நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவேற்றம் செய்ய வேண்டும். கடிதம் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

JEBZ

தலைவர் மனிதவளம்
**சனச டிவலப்மென்ட் பேங் பிஎல்சி**
தலைமையகம், இல 12, எட்மண்டன் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06

## சனச டிவலப்மென்ட் பேங்

SDBL

சனச டிவலப்மென்ட் பேங், எதிர்கால வளர்ச்சிக்கான உயிர்ப்பான நடவடிக்கைகளை எடுத்தும், வங்கித்துறையை நிலைநிறுத்தும் முகமாக திட்டங்களை வகுத்தும் செயற்படுத்தியும் வருகின்றது. அத்துடன் தனது செயற்பாடுகளால் நாட்டின் அபிவிருத்தியில் உயிர்ப்பான பங்களிப்பினை நல்கியுள்ளது. வெளிப்புறமான மாற்றங்களுடன், பன்முகப்படுத்தப்பட்ட வர்த்தக உத்திகளோடு அதிவேகமரன வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கின்றது.

அதனை வளர்ச்சிப் பாதையில் அதிவேகமாக இட்டுச்சென்ற வெற்றிமிக்க குழுவினைப் பலப்படுத்த வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இந்நோக்கத்தினை நிறைவேற்றும் முகமாக, தகுதிவாய்ந்தோரிடமிருந்து, வங்கியின் சட்ட அலுவலர்களு க்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது

# பிராந்திய சட்ட அலுவலர்கள்

(வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வெற்றிடங்கள்)

தெரிவு செய்யப்படுவோர், சட்ட வரைவுகள், நொத்தாரிகச் செயற்பாடுகள், நிறுவனத்தின் சார்பாக வழக்குகள், தீர்ப்பாயங்கள் என்பனவற்றில் சமூகமளித்தல், நிறுவனத்துக்காக சட்ட ஒப்பந்தங்களைத் தயாரித்தல், வங்கிச் சட்டங்கள், மற்றும் கட்டுப்பாட்டாளர்கள், அதிகாரிகளுடன் இணங்கிப்போவதை உறுதி செய்தல்

- தகைமைகள் - ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் பணியாற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் கொண்ட சட்டத்தரணி மற்றும் நொத்தாரிக
- வயது - 40 வயதுக்கும் கீழ்ப்பட்டவர்கள்
- அனுபவம் - நிதித்துறையில் சட்ட அலுவலராக 03 வருடங்களுக்கும் குறையாத அனுபவம்

தேர்வு செய்யப்படும் தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு, இத்துறையின் தராதரங்களுக்கேற்ப ஏனைய நன்மைகளுடன் சேர்ந்த கவர்ச்சிகரமான சம்பளப்பொதியொன்று வழங்கப்படும்

www.sdb.lk எனும் இணையத்தள முகவரியினூடாக உங்கள் சுயவிபரத்தினை, உறவினரல்லாத சிபாரிசுதாரர்களின் விபரத்துடன் தரவேற்றுவதன் மூலம் நீங்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

அல்லது

உங்கள் விண்ணப்பங்களை, உறவினரல்லாத சிபாரிசுதாரர்களின் விபரத்துடன் ஏழு நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். விண்ணப்பிக்கும் பதவி தபாலுறையின் இடது புற மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.

JEBZ

தலைவர் மனிதவளம்
**சனச டிவலப்மென்ட் பேங் பிஎல்சி**
தலைமையகம், இல 12, எட்மண்டன் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06

# மண் சரிவினால் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு அனுதாபம்

தென்மராட்சி, நவ.16

அண்மையில் ஏற்பட்ட மண்சரிவினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பிரதேச தலைவர் சி.துரைராஜா கூட்ட ஆரம்பத்தில் அனுதாபப் பிரேரணையைச் சமர்ப்பித்து மண்சரிவினால் இன்னுயிர்களை இழந்த குடும்பங்களுக்கும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்க வேண்டுமெனவும் உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்துச் சபை உறுப்பினர்கள் எழுந்து நின்று இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தியதுடன் அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானத்துக்கு ஏகமனதாக ஆதரவு தெரிவித்தனர். (த-9)

# தேங்காய் களவு அதிகரிப்பு

தென்மராட்சிப் பிரதேசச் சந்தைகளில் தேங்காய் விலை திடீரென அதிகரித்து வருவதால் தென்மராட்சி கிழக்குப் பகுதிகளில் தென்னந்தோட்டங்களில் தேங்காய்த் திருட்டு அதிகரித்துள்ளதாக தென்னம் தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்தனர். தொலைபேசிகளுடன் வரு வோர் தென்னந்தோட்டங்களில் அத்துமீறி நுழைந்து தேங்காய்களைப் பிடுங்கிச் செல்வதாகவும் தடுக்கச் செல்வோர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# தொடர்ச்சிகள்

## கிளிநொச்சியில்

இதனையடுத்து இராணுவத்தினரின் குடும்பப் பதிவு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு மக்கள் ஓரளவு நிம்மதியாக இருந்தனர். கடந்த சிலவாரங்களாக மீண்டும் கிளிநொச்சியின் கிராமங்களுக்குச் செல்லும் இராணுவத்தினர் குடும்ப விவரங்களைத் திரட்டும் பணியை ஆரம்பித்துள்ளனர். இதனால் மக்கள் மத்தியில் அச்சமும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

இராணுவத்தினர், தாம் கொண்டு செல்லும் பெரிய பதிவேடு ஒன்றில் குடும் பத்திலுள்ள அங்கத்தவர்களின் விவரங்கள், அவர்களின் தற்போதைய தொழில், வயது, 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் என்ன தொழில் செய்தார்கள், குடும்ப அங்கத்தவர்களின் வெளியிடத் தொடர்புகள் எனப் பல தரவுகளைக் கேட்டுத் திரட்டி வருகின்றார்கள் என்று கூறப்படுகின்றது. (த-426)

## பொது

எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பான சூழ்நிலை காணப்படுகின்றது. மேலும் பொது எதிரணி வேட்பாளர் தொடர்பில் எதிர்க்கட்சிகள் இன்னமும் முடிவெடுக்காமலேயே உள்ளன. தற்போதைய நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அந்தக் கட்சியின் தலைமைத்துவச் சபையின் அமைப்பாளர் கருஜெயசூரிய, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, மாதுளுவாவே சோபித தேரர், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க ஆகியோரின் பெயர்கள், பொது எதிரணி வேட்பாளருக்கான பட்டியலில் உள்ளன.

இதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா போட்டியிடுவதில் சட்டச் சிக்கல்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதன் காரணமாக அவர் போட்டியிடுவதில் இருந்து பின்னடித்துக் கொண்டிருக்கின்றார். ஆனாலும் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளார். மாதுளுவாவே சோபித தேரர் தான் போட்டியிடப் போவதில்லை என்று உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை, ஐக்கிய தேசியக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் ஆதரிப்பதற்கு இன்னமும் தயார் இல்லை. ஆனால் கருஜெயசூரியவை எதிரணியிலுள்ள சகல கட்சிகளும் ஏற்றுக் கொண்டாலும், அவருக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் அரைவாசிப் பேர் வரையில் ஆதரவு தெரிவிக்க மறுக்கின்ற நிலைமையே காணப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்கவை, ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமே எதிர்த்து வருகின்றது. ஆனாலும், அவரால் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்குகளை கவரக் கூடிய செல்வாக்கு இருப்பதையும் சந்தேகக் கண்ணுடனேயே எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு நோக்குகின்றது.

ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் என்ற ஒற்றைக் கோஷத்துடன் மாத்திரமே தற்போது எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. ஆளுங்கட்சியின் முக்கிய பங்காளிக்கட்சியான ஹெல உறுமயவும் இதே கோஷத்தையே எழுப்பி வருகின்றது. இதனால் பொது எதிரணியில் ஹெல உறுமயவும் விரைவில் இணையக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும், பொது எதிரணி வேட்பாளர் யார் என்பது நாளை முடிவாகவுள்ளது. இதன் உத்தியோகபூர்வ முடிவு எதிர்வரும் 21 ஆம் திகதி வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## உயர்

துக்குக் கிடைக்கவில்லை என்று சபாநாயகர் சமல் ராஜ பக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்ட, ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாகப் போட்டியிடுவதற்கு அனுமதி இருப்பதாக உயர் நீதிமன்றம் வழங்கிய சட்ட விளக்கத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு, எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம கொரடா ஜோன் அமர துங்க கோரிக்கையை முன்வைத்தார்.

இந்தச் சட்ட விளக்கத்தில் உள்ள விடயங்களை மக்கள் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிந்துக் கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

இதன்போது பதில் அளித்த சபாநாயகரும் ஜனாதிபதி யின் சகோதரருமான சமல் ராஜபக்ஷ, இந்தச் சட்ட விளக் கம் எமக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று குறிப்பிட டார். இந்தச் சட்ட விளக்கம் கிடைக்கப் பெற்ற உடன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது எழுந்த எதிர்க் கட்சிகளின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்க, ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த பின்னர் இந்தச் சட்டவிளக்கத்தை அறிந்துக் கொள்வதில் அர்த்தமில்லை என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த 11 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போது, சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா, ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ மூன் றாவது முறை போட்டியிடு வதில் எந்தச் சட்டச் சிக்கலும் இல்லை என்று உயர் நீதி மன்றம் விளக்கம் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## நெல்சிப் மோசடி அறிக்கை

ரணை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி பணித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் 2010 ஆம் ஆண்டிலிருந்து நெல்சிப் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் மாவட்டப் பொறியியலாளராக செயற்பட்டவர், பாரிய நிதி மோசடி செய்துள்ளதாக பல்வேறு தரப்பினரும் குற்றம்சாட்டியிருந்தனர்.

இதனடிப்படையில் ஆரம்ப விசாரணை முன்னெடுக்கப்பட்டு குறித்த பொறியியலாளர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தார். அதன் பின்னர் வடக்கு மாகாண ஆளுநரினால் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு விசாரணைகளை ஆரம்பித்திருந்த நிலையில், திடீரென்று ஆளுநரினாலேயே அது கலைக்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண முதலமைச்சருடன் இணைந்து, முதலமைச்சரின் செயலாளரினால் விசாரணைகளை முன்னெடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் இந்த மாத ஆரம்பத்தில் பணித்திருந்தார். அத்துடன் இந்த விசாரணைக் குழுவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அதிகாரி ஒருவரையும் இணைத்துக் கொள்ளுமாறு பரிந்துரைத்திருந்தார்.

தற்போது, முதலமைச்சரின் செயலாளர் தலைமையில் முன்னெடுக்கப்படும் விசாரணைக் குழுதனது விசாரணை அறிக்கையை மூன்று வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆளுநரினால் பணிக்கப்பட்டுள்ளது. (த-5)

## முன்னாள்

எனக் கூறி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் காவல்துறையில் பணியாற்றிய முன்னாள் போராளியும், அரசால் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவிர ஆதரவாளருமான குடும்பஸ்தர் ஒருவர் மன்னார், வெள்ளாங்குளம் பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதையடுத்து மன்னாரில் பதற்றம் நிலவுகின்றது. இந்த நிலையில், முன்னாள் போராளியான குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பயங்கர வாதத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார், பனங்கட்டுக்கொட்டு கிராமத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான தங்கத்துரை ஜெயின்ஸ் (வயது - 38) என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்றுமுன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை ஒன்றுக்காக சென்றுவிட்டு வீடு திரும்பிய வேளை வவுனியாவில் இருந்து சென்ற பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வவுனியாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

கணவன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தனக்குத் துண்டொன்றைத் தந்துள்ளனர் என்று ஜெயின்ஸின் மனைவி தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது கணவருக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் முன்னர் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கு விசாரணைக்காக அவர் வெள்ளிக்கிழமை காலை மன்னார் நீதிமன்றத்திற்குச் சென்றார்.

விசாரணை நிறைவடைந்து வீடு திரும்புவதற்காக நீதிமன்றத்தில் இரு ந்து வெளியில் வந்த போது வெளியில் நின்ற பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் அவரைக் கைது செய்து வவுனியாவுக்கு அழைத்துச் சென்றனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் எனது கணவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், அவர் முன்னாள் போராளி என்றபடியால் அவருக்கு புனர்வாழ்வு வழங்கவேண்டும் எனவும் எனது கணவரைக் கைதுசெய்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தொலைபேசியில் என்னிடம் தெரிவித்தனர்.

எனது கணவர் கடந்த 20 வருடங்களுக்கு முன்பு விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தவர். 1994இல் புலிகள் அமைப்பில் இணைந்த அவர் 1995 ஆம் ஆண்டில் அதிலிருந்து விலகினார். அதன் பின்னர் என்னைத் திரு மணம் செய்து பிள்ளைகளுடன் குடும்ப வாழ்வில் ஈடுபட்டு வந்த நிலை யில் அவரைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர். புனர்வாழ்வு வழங்க வேண்டும் என்ற பெயரில் கைதுசெய்யப்பட்ட எனது கணவரை உடனடியாக விடுவிக்குமாறு நான் வேண்டிக்கொள்கின்றேன் - என்றார்.

## உள்ளூராட்சி

ஆயிரம் ரூபாவாகவும் ஜனாதிபதியினால் அதிகரிக்கப் பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

அதேபோன்று நகர சபை உறுப்பினரின் கொடுப்பனவு 7 ஆயிரம் ரூபாவில் இருந்து 20 ஆயிரம் ரூபாவாகவும், நகர சபைத் தலைவரின் கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபாவிருந்து 30 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கிள் பெற்றுக் கொடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற விவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-5)

## புலிகளுக்கு

கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

நோர்வேயின் முன்னைய அரசு விடுதலைப்புலிகளுக்கு நிதி வழங்கியதை உறுதிசெய்யக்கூடிய ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. எனவே இது குறித்து நோர்வே அரசு விசாரணை செய்யவேண்டும். விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியாது என்று எரிக் சொல்ஹெய்ம் எம்மிடம் தெரிவித்திருந்தார். அவரது கருத்து பிழையானது என்பதை அரசால் நிரூபிக்க முடிந்தது. இலங்கை தொடர்பாக ஐ.நா. விசாரணைக் குழுவின் முன்னிலையில் தான் சாட்சியமளிக்க தயார் என சொல்ஹெய்ம் குறிப்பிட்டிருந்தார். இது குறித்தும் நாம் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.- என்றார். (த-5)

## ஆயுதப்

ஜே.வி.பி போராளிகளை நினைவு கூரும் கார்த்திகை வீரர்கள் தினம் கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவின் திறந்த வெளி அரங்கில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜே.வி.பி. ஆயுதப் போராட்டம் நடத்திய காலங்களை விட நாடு இன்று பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. நாட்டின் வளங்கள் வெளிநாடுகளுக்கு மொத்தமாக தாரை வார்க்கப்படுகின்றது.

ராஜபக்ஷ குடும்பத்தினர் நாட்டை இன்னும் பல நூற்றாண்டுகள் அபிவிருத்தியில் பின்தங்கி இருக்கச் செய்யும் விதத்தில் கொள்ளையடிக்கிறார்கள். எதிர்காலச் சந்ததியினருக்காக இவர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு எமக்கு உண்டு. 1980 ஆம் ஆண்டுகளை விட மோசமான அழிவுப் பாதையில் நாடு சென்று கொண்டிருக்கின்றது. எனவே நாட்டை பாதுகாப்பதற்கு ஆயுதப் போராட்டம் தேவை. இது இன்று தவிர்க்க முடியாததாகி விட்டது -என்றார் அனுரகுமார. (த-5)

## நெல்சிப் மோசடி குறித்து

ராஜபக்ஷ உள்ளிட்ட பல் வேறு தரப்பினருக்கு விசாரணை நடத்தக் கோரி கடிதம் அனுப்பியிருந்தார்.

இதனடிப்படையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசாரணைகளை மேற்கொள்ளப் பணிப்பு விடுத்துள்ளார். வடக்கில் முன்னெடுக்கப்பட்ட நெல்சிப் திட்டம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

இதற்கமைய குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள், சுன்னாகம் பிரதேச சபையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நெல்சிப் திட்டம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இது தொடர்பில் பணிபுரிந்த அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் தொடர்பான விவரங்களும் திரட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## சாட்சியம்

முடிவுக்கு வந்துள்ளதாக ஐ.நா. அறிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணைக் குழுவுக்கு, போர்க் குற்றங்கள் குறித்துச் சாட்சியங்களை எழுத்து மூலம் சமர்ப்பிப்பதற்கான கால எல்லை கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தது. இருப்பினும் இதன் பின்னரும், சாட்சியங்களை ஐ.நா. விசாரணைக் குழு ஏற்றுக் கொண்டிருந்தது.

இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பேச்சாளர் ருபேர்ட் கொல்வின், 'சாட்சியமளிப்பு ஒக்ரோபர் 30 ஆம் திகதியு டன் முடிவடைந்திருந்தாலும், அதன் பின்னர் வழங்கப்படும் சாட்சியங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்' என்று தெரிவித்திருந்தார்.

தற்போது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இணையத்தளத்தில், சாட்சியங்களைச் சமர்ப்பிப்பதற்கான கால எல்லை முடிவுக்கு வந்துள்ளதாகவும், இனிமேல் சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த கால எல்லையின் பின்னரும் சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று ஐ.நா. தெரிவித்திருந்தமைக்கு இலங்கை கண்டனம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## மாகாண

மகா வித்தியாலத்தில் மாணவர்களுக்கு 'வழங்கப்படும் உலக உணவுத் திட்ட உணவில் மோசடி இடம் பெற்றமை தொடர்பாக வடக்கு மாகாண சபைக்கும் வவுனியா தெற்கு வல யக் கல்விப் பணிப்பாளருக்கும் தெரியப்படுத்தியமை மற்றும் குறித்த அதிபர் கடந்த காலங்களில் பாடசாலைகளில் செய்த சில மோசடிகளைப் பொதுமக்கள் மத்தியில் விமர்சித்தமை ஆகியவற்றுக்காகவே தனக்கு அதிபரால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக மாகாண சபை உறுப்பினர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வடமாகாண சபை உறுப்பினா இ.இந்திரராஜாவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்த அச்சுறுத்தல்தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதுடன் வடக்கு மாகாண சபைக்கும் தெரியப்படுத்தியுள்ளேன். எழுத்து மூலமானமுறைப்பாட்டை வடக்கு மாகாண கல்வியமைச்சுக்கும் அனுப்பி வைத்துள்ளேன் - என்றார். (த-402)

# சங்கா - மஹேல மீது சனத் பாய்ச்சல்




இலங்கை கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட வீரர்களான குமார் சங்கார, மஹேல ஜெயவர்தன ஆகியோர் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டங்களில் பேசிய முக்கிய விடயங்களை ஊடகங்களுக்கு கூறியுள்ளனர். இவ்வாறு இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவர் சனத் ஜெயசூரிய குற்றம் சாட்டியுள்ளார்.

குமார் சங்கார, தான் ஓய்வை எதிர்பார்க்கவில்லை எனவும் அணி தோல்வியில் செல்லும் வேளையில் தொடரின் இடை நடுவே விலகுவது தனக்கு விருப்பம் இல்லை எனவும் தெரிவித்திருந்தார்.

மஹேல ஜெயவர்தன உலகக்கிண்ணதுக்கு முன்னராக ஆரம்ப துடுப்பாட்ட வீராக விளையாட விரும்புவதாகவும் மத்திய வரிசை அனுபவம் இல்லாமல் இருப்பதால் தன்னை மத்தியவரிசையில் துடுப்பாடுமாறு தெரிவுக் குழுவினர் கோருவதாகவும் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இதனை தொடர்ந்தே சனத் ஜெயசூரிய குறித்த குற்றச் சாட்டை முன் வைத்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை அணித்தலைவர், பயிற்றுவிப்பாளர் ஆகியோருடன் நடந்த கூட்டத்துக்கு சிரேஷ்ட வீரர்கள் என்ற அடிப்படையில் அவர்களை அழைத்ததாகவும் கூறியுள்ள சனத், எதிர்வரும் காலங்களில் இவர்களை கூட்டங்களில் சேர்க்காமல் விட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனவும் கூறியுள்ளார்.

அத்துடன் இவர்கள் இருவரும் செய்துள்ள விடயம் பிழையான முன் மாதிரியாக அமைந்துள்ளது. நாங்கள் பேசிய விடயங்களை, ஊடகங்களில் கூறினால் எங்களுக்கு அது பெரிய சங்கடமான நிலையை உருவாக்கும். துடுப்பாட்ட வீரர்கள் எங்கே துடுப்பெடுத்தாட வேண்டும் என தீர்மானிப்பது தெரிவுக்குழுவினரே தவிர வீரர்கள் அல்ல. வீரர்கள் எங்கள் வேலையை செய்தால் நாங்கள் ஏன் என்றும் சனத் ஜெயசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

சங்கார, தம்மிக்க பிரசாத் ஆகியோரை இறுதி இரண்டு போட்டிகளில் இணைக்காமல் ஓய்வு வழங்குவது என, அணி அறிவிக்கும் போதே முடிவு எடுக்கப்பட்டுவிட்டது.

இதை நான் அவருடன் பேசும் போதும் அவர் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என தெரிவித்த சனத் ஜெயசூரிய, இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுடனான தொடர் வருகின்றது. சிரேஷ்ட வீரர்களை நாம் பாதுகாக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (5)

# மைலோ கிண்ண வலிகாமம் லீக் நேற்றைய ஆட்டங்களின் முடிவு



நேற்று ஆரம்பமான மைலோ கிண்ண வலிகாமம் லீக் ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

அராலி ஜேம்ஸ் அணிக்கும் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற ஆட்டம் இரு அணிகளும் கோல் அடிக்காத நிலையில் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. சமநிலை தகர்ப்பு உதைகளில் அராலி ஜேம்ஸ் 3:2 கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

அராலி அண்ணா அணிக்கும் கல்வளை விநாயகருக்கும் இடையிலான ஆட்டமும் தலா ஒரு கோல் அடித்த நிலையில் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. சமநிலை தகர்ப்பு உதைகளில் அண்ணா 4:2 என்ற கோல் கணக்கில் வென்றது.

மானிப்பாய் சாவற்கட்டு மகாத்மாவுக்கும் நவாலி சென். பீற்றஸ் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் சென். பீற்றஸ் 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

தெல்லிப்பழை நாமகளுக்கும் குப்பிளான் விக்னேஸ்வரா கழகத்திற்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் நாமகள் 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

இளவாலை யங்கென்றீஸ்க்கும் அராலி ஜேம்ஸ்க்கும் இடையில் முதலாவது காலிறுதியாட்டம் இடம்பெற்றது. இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. சமநிலை தகர்ப்பு உதைகளில் அராலி ஜேம்ஸ் 4:2 கோல் கணக்கில் வென்றது.

இரண்டாவது காலிறுதியாட்டத்தில் சென். லூட்ஸ் அணியை எதிர்த்து அராலி அண்ணா விளையாடியது. இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தனால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. சமநிலை தகர்ப்பு உதைகளில் 4:3 கோல் கணக்கில்சென். லூட்ஸ்வென்றது.

மூன்றாவது காலிறுதியாட்டத்தில் நவாலி, சென். பீற்றர்ஸ் அணியை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் விளையாடியது. இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன. சமநிலை தகர்ப்பு உதைகளில் 5:4 கோல் கணக்கில் சென். பீற்றர்ஸ் வென்றது.

முன்னதாக, மைலோ கிண்ண வலிகாமம் லீக் ஆட்டங்கள் நேற்றுக் காலை ஆரம்பமாகின. மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் முற்பகல் பகல் 10.00 மணியளவில் விருந்தினர்களுக்கு வீரர்களை அறிமுகம் செய்து வைத்தலுடன் ஆட்டங்கள் ஆரம்பமாகின.

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ். சிவகுமார் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ். சிவனேஸ்வரன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் நா. நவரத்தினராசா செயலாளர் எஸ். புவராஜ் உபதலைவர் கே. மகேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (உ- 86, 23)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ. 16

திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திருகோ ணமலை மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திருகோணமலை ஏகாம் பரம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

திருகோணமலை சாஹிராக்கல்லூரி அணிக்கும், திருகோணமலை விபுலானந்தக்கல்லூரி அணிக்கும் இடையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் திருகோணமலை விபுலானந்தக்கல்லூரி அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் உவர்மலைவிவேகானந்தா வித்தியாலய அணிக்கும், கோணலிங்கம் மகாவித்தியாலய அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உவர்மலை விவே கானந்த வித் தியாலய அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (23)

# ஆசிரியர்களுக்கான தேசியத் தடகளம்; யாழ்ப்பாணத்தில் நால்வருக்கு பதக்கம்




யாழ்ப்பாணம், நவ 16

நுவரெலியாவில் கடந்த வாரம் இடம். பெற்ற ஆசிரியர்களுக்கான தேசிய மட்ட தடகளப் போட்டியில் யாழ் கல்வி வலயத்தைச் சேர்ந்த 3 ஆசிரியர்கள் மற்றும் உடற் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் ஒருவர் பதக்கங்கள் பெற்றுள்ளனர்.

56 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்களுக்கான போட்டியில் யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண் தயாளன் ஈட்டி ஏறிதல் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், தட்டு எறிதல், உயரம் பாய்தல்போட்டிகளில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் திருமாறன் 41 வயதிற்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டி, 4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கமும், முப்பாய்ச்சலில் வெண்கலப் பதக்கமும் பெற்றுள்ளார்.

வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை ஆர். மிதுலா 36 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களுக்கான 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.


கலட்டி அமெரிக்கன் மிஷன் கலவன் பாடசாலை ஆசிரியை கருணகலாதேவி தட்டு எறிதல் ஈட்டி எறிதல் போட்டிகளில் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். (த-23)

## இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ். சென்றலைட் விளையாட்டுக்கழகம் நடத்தும், டொனால்க ணேஸ்குமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



உதைபந்தாட்ட மத்தியஸ்தரின் திறனை மேம்படுத்தும் செயலமர்வு நேற்று சனிக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம் பெற்றது. (23)



# ஐ.சி.சி ஒரு நாள் அணியில் நான்கு இந்திய வீரர்கள்

இந்த ஆண்டுக்கான ஒருநாள் போட்டிக்கான அணியை ஐ.சி.சி நேற்று வெளியிட்டுள்ளது. அதில் இந்திய அணி வீரர்களான டோனி, கோஹ்லி, ரோகித் சர்மா, முகமது சமி ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். இந்த அணியின் தலைவராக டோனி நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் டெஸ்ட் அணியில் இந்தியாவின் எந்த வீரர்களுக்கும் இடம் கிடைக்கவில்லை. டெஸ்ட் போட்டிக்கான அணியின் தலைவராக இலங்கை அணியின் அஞ்சலோ மத்தியூஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேலும் இலங்கை வீரர்களான சங்ககார, ரங்கண ஹேரத் ஆகியோரும் டெஸ்ட் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

அணி வீரர்கள் விவரம் வருமாறு:

ஒருநாள் அணி: முகமது ஹபீஸ்(பாக்), குயின்டன் டி கொக் (தெ.ஆ), விராத் கோஹ்லி(இந்தியா), பெய்லி (ஆஸி), டி வில்லி யர்ஸ் (தெ.ஆ), டோனி (இந்தியா-அணித் தலைவர், விக்கெட் காப்பாளர்), டுவெய்ன் பிராவோ(மே.இ.தீவுகள்), பல்க்னர் (ஆஸி), ஸ்டெய்ன் (தெ.ஆ), முகமது சமி(இந்தியா), மெண்டிஸ் (இலங்கை), ரோகித் சர்மா(இந்தியா-12ஆவது வீரர்).

டெஸ்ட் அணி: டேவிட் வோர்னர்(ஆஸி), கேன் வில்லியம்சன் (நியூசி), சங்ககார (இலங்கை), டி வில்லியர்ஸ் (தென். ஆ.-விக்கெட் காப்பாளர்), ஜோ ரூட் (இங்கி), மத்தியூஸ்-கேப்டன் (இலங்கை), மிட்செல் ஜோன்சன்(ஆஸி), ஸ்டூவர்ட் பிராட்(இங்கி), டேல் ஸ்டெய்ன்(தெ.ஆ.), ரங்கண ஹேரத்(இலங்கை), டிம் சவுத்தி (நியூசி), ரோஸ் டெய்லர்(நியூசி-12வது வீரர்). (த)



# மோசமான ஆட்டம் ரணதுங்க காட்டம்

இந்தியாவிடம் தோல்வியைத் தழுவிய இலங்கை அணி குறித்து இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் ரணதுங்க கடுமையாகச் சாடியுள்ளார். இந்தியாவை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக, இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள், இலங்கை கிரிக்கெட்டை இக்கட்டான நிலைக்குத் தள்ளி விட்டனர்.

தெரிவுக் குழுத் தலைவர் ஜெயசூரிய, பயிற்சியாளர் அத்தப்பத்து ஆகியோர் இந்திய சுற்றுப் பயணம் உலகக் கிண்ணத்துக்குத் தயாராக உதவும் எனத் தெரிவித்தனர்.

ஆனால், அது தவறு என்பது நிரூபணமாகி உள்ளது. இந்தியச் சுற்றுப் பயணத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது, வீரர்கள் உடற்தகுதியை மேம்படுத்தும் முகாம்களில் இருந்தனர். முறையான திட்டமிடல் இல்லாததால் இதுபோன்ற மோசமான முடிவுகள் கிடைத்துள்ளன என்று கூறியுள்ளார். (த)



# தொடரும் பங்களாதேஷின் ஆதிக்கம்

பங்களாதேஷ்-சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

இவ்விரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி தற்போது சிட்டகொங்கில் நடைபெறுகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி பங்களாதேஷ் அணி தனது முதல் இன்னிங்சில் சகல இலக்குகளையும் இழந்து 503 ஓட்டங் களைப் பெற்றது. பதிலுக்கு தமது முதல் இன் னிங்சை ஆரம்பித்த சிம்பாப்வே அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 374 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. 129 ஓட்டங்கள் முன்னிலையுடன் தமது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி 5 இலக்குகள் இழப்புக்கு 319 ஓட்டங்களை பெற்றிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அவ் அணி சார்பில் அதிக பட்சமாக கக்கியூ 131ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். 449 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட தமது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த சிம்பாப்வே அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேர நிறைவில் ஒரு இலக்கு இழப்புக்கு 49 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. றசா 29 ஓட்டங்களுடனும் மசகட்சா 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். ஆட்டத்தின் இறுதிநாள் இன்றாகும். (த-ரி)

# அட்லெடிகொ — சென்னை ஆட்டம் சமநிலையில்

கொல்கத்தாவில் நேற்று முன் தினம் நடைபெற்ற இந்தியன் சுப்பர் லீக் உதைபந்து போட்டியில் அட்லெடிகோ டி கொல்கத்தா-சென்னையின் எப்.சி. அணிகள் இடையிலான ஆட்டம் கோலின்றி சமநிலையில் முடிந்தது.

இரு அணிகளுமே பலம் வாய்ந்தவை என்பதால் ஆட்டம் ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இருந்தது. சென்னையில் நடைபெற்ற இவ்விரு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் (1-1) முடிந்ததால் இரு அணிகளும் தங்களின் பலத்தை நிரூபிக்கும் வகையில் இந்த ஆட்டத்தில் வெற்றி பெறுவதற்குத் தீவிரம் காட்டின. ஆனாலும் முதல் பாதி ஆட்டத்தில் கோல் எதுவும் விழவில்லை.

பின்னர் நடைபெற்ற 2 ஆவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோலடிக்கக் கடுமையாகப் போராடியபோதும் கடைசிவரை கோல் விழவில்லை. இதனால் ஆட்டம் கோலின்றி சமநிலையில் முடிய சொந்த மண்ணில் தங்கள் அணி வெற்றி பெறும் என எதிர்பார்த்த கொல்கத்தா ரசிகர்கள் ஏமாற்றத்தோடு மைதானத்திலிருந்து வெளியேறினர்.

புள்ளிகள் பட்டியலில் இரு அணிகளும் தலா 13 புள்ளிகளுடன் இருந்தாலும், கோல் வித்தியாச அடிப்படையில் அட்லெடிகோ அணி முதலிடத்தில் உள்ளது. (த)



# டிவில்லியர்ஸ் சாதனை



ஒருநாள் போட்டிகளில் குறைந்த இன்னிங்ஸ்களில் 7,000 ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற சாதனையை நிகழ்த்தினார் ஏ.பி. டிவில்லியர்ஸ். பேர்த்தில் நேற்று முன் தினம் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் சர்வதேச போட்டியில் தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ் 7,000 ஓட்டங்களைக் கடந்தார். இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட்டில் குறைந்த இன்னிங்ஸ்களில் 7,000 ஓட்டங்களைக் கடந்தவர் என்ற சாதனையை நிகழ்த்தினார்.

166 இன்னிங்ஸ்களில் அவர் 7,000 ஓட்டங்களைக் கடந்து உலக சாதனை புரிந்துள்ளார். இதற்கு முன்னர் இந்தச் சாதனையை வைத்திருந்தவர் கங்குலி. இவர் 174 இன்னிங்ஸ்களில் 7,000 ஓட்டங்களைக் கடந்தார்.

ஆனாலும் டிவில்லியர்ஸின் சாதனை குறுகிய காலமே நீடிக்கும் என்று தெரிகிறது. காரணம், இந்தியாவின் விராட் கோஹ்லி 137 இன்னிங்ஸ்களில் 6,069 ஓட்டங்களை எடுத்துள்ளார். இவர் டிவில்லியர்ஸின் சாதனையை முறியடித்து விடுவார் என்று தெரிகிறது.

விராட் கோஹ்லிக்கு அடுத்தபடியாக தென்னாபிரிக்காவின் ஹஷிம் அம்லா 96 இன்னிங்ஸ்களில் 4,798 ஓட்டங்கள் எடுத்துள்ளார். கடைசி 20 ஒருநாள் இன்னிங்ஸ்களில் டிவில்லியர்ஸ் 1,124 ஓட்டங்களை விளாசியுள்ளார். இதில் 4 சதங்கள் 6 அரைச் சதங்கள்.

முன்னதாக கங்குலிக்கு அடுத்த இடத்தில் பிரையன் லாரா 183 இன்னிங்ஸ்களில் 7000 ஓட்டங்களை கடந்திருந்தார். டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ் 187 இன்னிங்ஸ்களிலும், ஜக் கலிஸ் 188 இன்னிங்ஸ்களிலும், சச்சின் டெண்டுல்கர் 189 இன்னிங்ஸ்களிலும், கெய்ல் 189 இன்னிங்ஸ்களிலும், தோனி 189 இன் னிங்ஸ்களிலும் பொண்டிங் 192 இன்னிங்ஸ்களிலும் 7000 ஓட்டகளைக் கடந்துள்ளனர். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல் மாலை 5.00 மணி வரை.

இல.97/8, கண்ணகி அம்மன் கோயில் ஒழுங்கை, கோப்பாய் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம். (உரும்பிராய் சந்திக்கு அருகில்) (50509) (4.3.6)

T.P: 072 681 6681, 072 681 6691

## பணிப்பெண் தேவை

நல்லூரில், வீட்டில் தங்கி நின்று நடமாடக்கூடிய வயோதிபப் பெண்ணைப் பராமரிப்பதற்கு (30 - 55 வயதுக் குட்பட்ட) பணிப்பெண் தேவை.

(54268) (12.3) தொடர்பு: 077 674 1213

## வாகன PERMIT தேவை

US $ 25000 to US $ 45000

(54037) (12.3) தொடர்பு: 071 324 8518

## தேவை

K.K.S Railway Station இல் வேலை செய்யக்கூடிய மேசன்மார், சட்டறிங் பாஸ்மார், கம்பி வேலை செய்யக் கூடியவர்கள் தேவை. (சி/17619) (7.6.3)

தொடர்பு : 077 375 1803, 071 454 0731

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் பல்வேறு வேலைத் தளங்களில் (கட்டட நிர்மாணம்) வேலை செய்வதற்கு கூலியாள்கள், மேசன்மார், கார்பென்டேர்ஸ் (தச்சர்), கம்பி தொழிலாளிகள் (பார் பென்டேர்ஸ்) மார்பிள் மேசன்மார் உடனடியாகத் தேவை.

**விவரங்களுக்கு:**
077 375 1803, 077 592 9304, 071 238 7106, 071 328 6711, 077 639 3412, 077 159 5598, 021 320 2726 (54315)

## German Institute

German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் பல வருட காலமாக யாழ்ப்பாணத்தில் கஜேந்தினி ஆசிரியையால் நடைபெறுகின்றது.

10, Palaly Road, Jaffna.
T.P: 077 160 4823
Mrs. P. Kajenthini (54329) (10)

## எடிசன் அக்கடமி

27ஆம் ஆண்டு நிறைவுப் பரிசளிப்பு விழா அழைப்பு-2014
காலம் : 16.11.2014 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00
இடம் : சரஸ்வதி மண்டபம் (ராஜா கிறீம் ஹவுஸ்) இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
பிரதம விருந்தினர்: பேராசிரியர் தி. வேல்நம்பி பீடாதிபதி-முகாமைத்துவ கற்கைகள், வணிகபீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பரிசில் வழங்கல்: திருமதி சஜிதா வேல்நம்பி B.A
சிறப்பு விருந்தினர்: Dr. R.கஜானனன் (பழைய மாணவர், எடிசன் அக்கடமி) யாழ். போதனா வைத்தியசாலை.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
B.P. பாஸ்கரன்- நிர்வாகி
(C/17721) (10)

## மன்னார், யாழ்ப்பாணம் PERSONAL CLASS

A/L Chemistry - Abaraagithan B.Sc
தொடர்பு: 077 319 8263 (54284)

## பிரத்தியேக வகுப்பு

தரம் 6-12 வரையான ஆங்கில வகுப்பு மற்றும் அனைவருக்கும் Spoken English, கணினி வகுப்பு வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: 072 186 7203 (54277) (4.6.3)

## தேவை

றொசானி காமன்ஸ் இற்கு தையல் தெரிந்த பெண்கள் தேவை.

**கிளை**
சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

**தொடர்பு:**
263/1, இராஜகாரியர் வீதி, மானிப்பாய்.
(54100) (4.6.3)

## P.A / Secretary for Managing Director

For a U.K based property developing company operating from Jaffna.
Preferably a female with Experience must be a computer Literate.
**please send C.V to tilko e mail :**
**tilko.tilak@gmail.com** (54256)

## காணி விற்பனைக்கு

ஆவரங்காலில் இருந்து அச்சுவேலி செல்லும் வீதியில் பிரப்பந்தாழ்வு குளத்திற்கு அருகில் அமைந்துள்ள 7 பரப்பு 4 ¼ குழி உடைய காணி விற்பனைக் குண்டு.

தொடர்பு: 077 491 1974 (54320)


## தொடர்பு கொள்ளவும்

2014ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய எமது **British Business College** இன் மாணவர்களை நாம் வாழ்த்துவதுடன் அவர்களை எமது பாடசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## விண்ணக வாழ்வின் 3 ஆம் ஆண்டு நினைவு

**அமரர் தம்பிராசா பீற்றர்சன் விஜயசிங்கம்**

(ஓய்வு பெற்ற வரி மேற்பார்வையாளர், முன்னாள் ShamRock Academy நிர்வாகி



"நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்"

ஆண்டுகள் மூன்று ஆனதப்பா!
எங்கேயப்பா ஒளிந்து கொண்டீர்கள்
எங்கள் உள்ளம்
வேதனை இருளில் தவிக்க
உம் பொன்முகம்
உம் புன்னகை எமக்குப் போதும் அப்பா!
கார்த்திகை என்னும் இறந்தோரை
நினைவு கூரும் மாதத்திலே
உங்களுக்காகவும் இறந்த
ஆன்மாக்களுக்காகவும்
பிரார்த்திக்கின்றோம்.

மண்ணில் 25.09.1945
விண்ணில் 16.11.2011

இறைவா உமது இரக்கத்தை இறந்த பீற்றர்சன் விஜயசிங்கம் மேல் காட்டியருளும்

7/1, ஈச்சமோட்டை. (54061) (4.6.3) **குடும்பத்தினர்.**

## CIMA-UK, ENGINEERING,BIT

**புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள்**

கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக்கல்வியை நிறைவு செய்தோர், பல்கலைக்கழக மாணவர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடுகளில் தொழில் தேடுவோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரசவேலையிலும் வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிக சம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக் குறைந்த கல்வித் தகைமை க.பொ.த சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 19 நவம்பர். புலமைப்பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் உங்கள் பெயர் கற்கைநெறி என்பவற்றை **77295895**ற்கு **sms** செய்யவும். பதிவுக்கட்டணம், வருடாந்தக்கட்டணம், கற்கைநெறிக் கட்டணம், பரீட்சைக்கட்டணம் என்பன புலமைப்பரிசிலாக வழங்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களை யாழ்ப்பாணபல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள **MCS** நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## LONDON METROPOLITAN COLLEGE

LONDON METROPOLITAN COLLEGE

**CALL FOR REGISTRATION 021 753 8395**

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.

**IELTS**
ACADEMIC & GENERAL
DURATION: 48 HRS
WEEK/ WEEK ENDS
- ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்

**City & Guilds A1 B1**
DURATION: 48 HRS
WEEK/ WEEK ENDS
- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
- ESOL,SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும்.

**Certificate in SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning programme)
Duration: 60 hrs Week/ Week ends
- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துகொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல்புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH**
Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs
- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியனவிசேட செயன்முறை மூலம் விரிவாககற்பிக்கப்படும்.
- A/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்கு செய்யப்படும்.

Weekdays: 17.11.2014|24.11.2014 || Weekends: 16.11.2014|23.11.2014
அனைத்து கற்கைநெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்
#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## German Language Academy

**(கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி)**

01.10.2014 ஆம் திகதி நடந்த பரீட்சையில் கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரியின் ஊடாக **A1** பரீட்சையில் அதி கூடிய புள்ளிகள் பெற்று சித்தியடைந்த மாணவர்களை இந்த படத்தின் ஊடாக அறியத்தருகின்றோம்.




இந்த மாணவர்களை எமது நிறுவனத்தின் ஊடாக அதி புள்ளிகளைப் பெற்று தந்தமைக்கு பாராட்டி வாழ்த்துகின்றோம்.
**ஆரியகுளம், யாழ்ப்பாணம்.**
T.P: 077 970 7322 (C/17597)(10.6)

## சர்வதேச தரம்மிக்க ஆங்கில கற்கை நெறிகள்

**British Council** ஊடாக நடைபெறும் சர்வதேச முதற்தர ஆங்கிலக் கற்கைநெறிப் பரீட்சையான **"Cambridge English"** ற்கு உரிய கற்கை நெறிகளை CIL நிறுவனம் மிகக்குறைந்த கட்டணத்தில் கற்பிக்கின்றது.

| Cambridge English UK Qualification | CIL Qualification | IELTS Band | CEFR Level |
|---|---|---|---|
| Cambridge English : Proficiency | Diploma in English Mastery | 7.5 - 9.0 | C2 |
| Cambridge English : Advanced | Diploma in English Final | 6.5 - 7.0 | C1 |
| Cambridge English : First | Diploma in English Intermediate | 5.0 - 6.0 | B2 |
| Cambridge English : Preliminary | Diploma in English Foundation | 3.5 - 4.5 | B1 |
| Cambridge English : key (KET) | Certificate in English | 3 | A2 |
| Cambridge English : Movers | Foundation in English | 1.5 - 2.5 | A1 |



ஒரு கற்கை நெறியை கற்பதனால் தரம்மிக்க இரு சான்றிதழ் பெற இது ஓர் அரிய வாய்ப்பு

Spoken English > சரளமாக பேச 100% உத்தரவாதம்
IELTS > வெளிநாடு … செல்லும் மாணவர்களுக்கானது.

புதிய பிரிவுகள் ஆரம்பம் 22.11.2014 (Sat . 9.00am)

**CIL Cambridge Institute of London**
No.17,3rd Lane, Power House Road, Jaffna.
Tel : 0212217774 / 0777382108 (ராசி சில்க்ஸ் அருகாமையில்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.